Reg. No. M. 1725.

பத்திராசிரியர்: [illegible]
மணி. திருநாவுக்கரசுமுதலியாரவர்கள்



செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு க } ருத்ரோத்காரி ஆடி { பரல் எ

உள்ளுறை

மெய்கண்டதேவர் படம்	
சமயம்	உ௱கூ
திருநான்மறை விளக்கம்	உகடு
தமிழ்ப்புலவர் வரலாறு:	
அகத்தியர்	உஉசு
கிரேக்க தத்துவ ஆராய்ச்சி	உஉகூ
தாள சமுத்திரம் உரையுடன்	உ௩௪
இசை	உ௩எ
குறிப்புக்கள்	உ௪க

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

வருடக் கையொப்பம் ரூ. 3. தனிப்பால் அணா .6,

All Rights Reserved

‘செந்தமிழ்ச் செல்வி’ இதழாசிரியர்

கூட்டத்து உறுப்பினர்கள்

Editorial Board Members

1. திருவாளர் மணி. திருநாவுக்கரசு முதலியாரவர்கள்
தமிழாசிரியர், பச்சையப்பன் கலாசாலை, சென்னை.

2. ,, பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் B.E., M C I,
சூப்ரின்டெண்டிங் எஞ்சினியர், வால்டேயர்.

3. ,, கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.,
அட்வகேட், நியாயகலாசாலைப் பேராசிரியர் சென்னை.

4. ,, ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T.,
தலைமை உபாத்தியார், அரசாங்க உபாத்தியாயர்
தேர்ச்சிச் சாலை ஸ்ரீவில்லிபுத்தூர்.

5. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
தலைமைத் தமிழாசிரியர், எஸ். பி. ஜி. காலேஜ்,
திருச்சிராப்பள்ளி.

6. ,, துடிசைக்கிழார் அ. சிதம்பரனாரவர்கள்
போலீஸ். சர்க்கிள் இன்ஸ்பெக்டர், பல்மனேரி,
சித்தூர்.

7 ,, M. V. நெல்லையப்ப பிள்ளையவர்கள் B.A.,
பென்ஷன் தாசில்தார், சிந்துபூந்துறை.

நான்கு பெரும் பேறுகள்.

1. ‘செந்தமிழ்ச் செல்வி’ என்னும் இவ் வுயரிய திங்கள் வெளியீடு ஒவ்வொரு ஆங்கிலமாதம் பத்தாம் நாளில் (தமிழ் மாதமுடிவில்) காலந்தவறாது வெளிவருகிறது.

2. பளபளப்பான உயர்ந்த சீர்மைக் கடிதத்தில் புத்தம் புதிய எழுத்துக்களில் கண்ணைக்கவருந் திறத்ததாக அச்சிடப்பட்டு வெளிவருகிறது.

3. இதன் கண் வெளிவரும் தமிழ்நாடு, தமிழ்மொழி, சமயம், மேனாட்டுத் தத்துவம் முதலியவற்றைப் பற்றிய பொருள்கள் கற்போர்க்கு இன்பம் பயக்கும் பெற்றியன.

4. குறைந்த கையொப்பத் தொகை (ரூ 3.) உடையது.

இச் செல்விக்குப் புதிய கையொப்ப நண்பர்களைச் சேர்த்தனுப்புகிறவர்கள் உண்மையில் தமிழுக்கும், சமயத்திற்கும் உழைப்பவர்களாகவே கருதப்படுவார்கள்.

இப்போதிருக்கும் கையொப்ப நண்பர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு புதிய கையொப்பம் சேர்த்தனுப்ப முன் வருவார்களாயின் நமது ‘செந்தமிழ்ச் செல்வி’ செழிப்புறுவள்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை.

மெய்கண்டதேவர்

இது திருவெண்ணெய் நல்லூரிலிருக்கும்
கற்சிலையினின்றும் எழுதப்பட்டது

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்
திங்கள் தோறும் வெளிவருவது.

சிலம்பு க.	மெய்கண்டான்ஆண்டு-எாா. ஆடித் திங்கள். 1923ஞு ஜுலை—ஆகஸ்டுமீ	பரல் எ.

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

சமயம்

இந்நில உலகத்தில் வாழும் மக்கள் அறிவு, உணர்ச்சி, சுவை முதலியவற்றால் வெவ்வேறு தன்மையுடையவராகவும் பக்குவமுடையவராகவும் காணப்படுதல் நாம் அனுபவமாகக் கண்ட உண்மை. இத் திறத்தினர்க்கு ஏற்றவாறு பலவேறு காலங்களில் பலப்பல சமயங்கள் தோன்றியிருக்கின்றன. ஒவ்வோர் சமயமும் ஒவ்வோராற்றான் உலகம், உயிர், கடவுள் என்னும் பொருள்களை விளக்குவனவே யாகும். தத்துவ ஆராய்ச்சி செய்து, உண்மையை யறியும் பகுதியில் எல்லாச் சமயங்களும் ஒரே வழியைக் கடைப் பிடித்துச் செல்வனவாயினும் பொருள்களைக் கூறுந் துறையில்

அவை பெரிதும் பேதமுடையன. ஆதலின், ஒரு சமயம் கூறும் வழி மற்றொரு சமயம் கூறுது. கொள்கைகளிலே ஒன் றற்கொன்று முரண்பாடுகள் பல காணப்படும். இது பற்றியே சிவானுபூதிப் பெருஞ் செல்வராய தாயுமான சுவாமிகள்,

> 'பேதித்த சமயமோ ஒன்று சொன்னபடி ஒன்று
> பேசாது' என்றும்,

> 'பூதலய மாகின்ற மாயைமுத லென்பர்சிலர்,
> பொறிபுல னடங்குமிடமே
> பொருளென்பர் சிலர், கரண முடிவென்பர் சிலர், குணம்
> போனவிட மென்பர் சிலபேர்;
> நாதவடி வென்பர் சிலர், விந்துமய மென்பர் சிலர்,
> நட்டநடு வேயிருந்த
> நாமென்பர் சிலர், உருவ மாமென்பர் சிலர், கருதி
> நாடிலரு வென்பர்சிலபேர்,
> பேதமற வுயிர்கெட்ட நிலயமென் றிடுவர்சிலர்,
> பேசினரு ளென்பர் சிலபேர்,
> பின்னுமுன் னுங்கெட்ட சூனியம தென்பர்சிலர்,
> பிறவுமே மொழிவர்; இவையாற்
> பாதரச மாய்மனது சஞ்சலப் படுமலாற்
> பரமசுக நிட்டை பெறுமோ?
> பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
> பரிபூர ணனந் தமே.'

என்றும் அருளிச் செய்வாராயினர்.

எனினும் சமயங்கள் யாவும் அருட்பெருங்கடலாகிய தனி முதற் கடவுளால் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்றபடி வற் பட்டன வென்பதே அறிஞர் துணிபு. இதனை,

> 'வேறுபடுஞ் சமயமெல்லாம் புகுந்து பார்க்கின்
> விளங்குபரம் பொருளேநின் விளையாட் டல்லான்
> மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
> வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற் றம்மா' என்றும்,

> 'ஆறுசம யங்கடொறும் வேறுவே ருகிவிளை
> யாடுமுனை யாவ ரறிவார்'

என்றும் அருளிச்செய்த தாயுமானவர் திருவாக்கானும், 'அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்' என்றும், 'அறுசமயக் கூத்துமாடி' என்றும் வரும் பிறசான்றோர் திருவாக்குக்களானும் அறிக.

ஒவ்வொரு சமயமும் தாம் தாங்கொண்ட கொள்கைகளே மெய்யென்றும், ஏனைச் சமயத்தார் கொள்கைகள் பொய்யென்றும், மற்றைச் சமயங்களையும் சமயக் கடவுளரையும், சமய நூல்களையும் இழித்துக் கூறும். அதனால், உண்மை விழையும் மக்கள் இன்னது தான் பொருள் என்று துணிந்து கொள்ளுதல் கல்லில் நாருரிப்பதுபோலக் காணப்படுகின்றது.

ஆனால், எல்லாச் சமயங்களும் ஆன்மாக்களின் பக்குவத்திற் கேற்றவாறு முதல்வனாலும், அம் முதல்வன் அருள் வழிப்பட்ட ஆன்றோர்களாலும் தோன்றினவென்பது பொருந்தும். எனினும், முதிர்ந்த நிலையை எடுத்துக்காட்டும் சமயம் யாது? என்பதும் அறியற்பாற்று. எச்சமயம் எல்லாச் சமயங்களையும் ஒப்புக் கொண்டு, அச் சமயப் பொருள்களை யெல்லாம் தன்னகத்தே யடக்கிக்கொண் டிருக்குமோ அதுவே, முதன்மையான சமயமாம். அதுவே யாதொரு அடைமொழியுமின்றிச் சமயம் என்னும் பெயரானே அழைக்கப்படும் பெருஞ்சிறப்பிற்றும் என்னும் பேருண்மையைச் சிவஞான சித்தியாரின்கண் வரும்

'ஓதுசம யங்கள்பொரு ளுணரு நூல்க
ளொன்றோடொன் றொவ்வாம லுளபலவு மிவற்றுள்
யாதுசம யம்பொருணூல் யாதிங் கென்னின்
இதுவாகு மதுவல்ல தெனும்பிணக்க தின்றி
நீதியினு னிவையெல்லா மோரிடத்தே காண
நின்றதியா தொருசமய மதுசமயம் பொருணூ
லாதலினு னிவையெல்லா மருமறையா கமத்தே
யடங்கியிடு மவையிரண்டு மானடிக்கீ ழடங்கும்'

என்னுந் திருவிருத்தத்தான் செவ்வனம் உணர்க.

இங்ஙனம், எல்லாச் சமயங்களின் இருப்பையும் ஒப்புக் கொண்டு, அவற்றிலுள்ள பொருள்களை யெல்லாம் தனக்

குள்ளே அடக்கிக்கொண்டிருக்கும் சமயம் சைவ சமயமேயாம். ஆதலின், ‘சைவ சமயமே சமயம்’ என்று சொல்லப்படும். இவ்வுண்மையைக் கடைப்பிடித்தே, தாயுமான சுவாமிகள் பல அரிய பாடல்களை அருளிச் செய்துள்ளார். அவரைப் போல இதனைத் தெளிவாக விளக்கிக் காட்டிய வித்தகர் ஒருவருமிலர். சிவஞான சித்தியார் என்னும் அரிய பெரிய நூலிலே காணப்படும் உண்மைகள் பலவும் தாயுமானவர் திருப்பாடல்களில் விரித்து ஓதப்பட்டிருத்தலை யாவரும் காணலாம். அன்றியும், அவர் மற்றச் சமயங்கள் யாவும் சைவ சமயமாகிய உன்னத நிலையை அடைவதற்குரிய சோபான மார்க்கங்களென்றும் எடுத்துக்காட்டினர். அன்றியும், இவ்வழகிய உண்மையை நனிவியந்து பொங்கியெழுந்த பேருவகையிற் றிளைத்து, அவ்வருட்பெருஞ் செல்வர்,

> ‘அந்தோ ! வீததிசயமிச் சமயம் போலின்
> றறிஞரெல்லா நடுவறிய வணிமா வாதி
> வந்தாடித் திரிபவர்க்கும் பேசா மோனம்
> வைத்திருந்த மாதவர்க்கு மற்று மற்று
> மிந்த்ராதி போகநலம் பெற்ற பேர்க்கு
> மிதுவன்றித் தாயகம்வே றில்லை யில்லை
> சந்தான கற்பகம்போ லருளைக் காட்டத்
> தக்கநெறி யிந்நெறியே தான்சன் மார்க்கம்’

என்னும் திருப்பாட்டை யருளிச்செய்து அதன்கண் சைவ சமயமே யுண்மை மார்க்கமென்னும் பொருள்படச் சன்மார்க்கமென்றனர். அம்மட்டோ! அவர் சைவ சமயத்தை எல்லாச் சமயப்பொருள்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் சமயமென்பதனோ டமையாது, அஃது எல்லாவற்றிற்கும் மேற்பட்ட நுண்பொருளை யுடைய ஒப்பற்ற சமயம் என்பது தெளிந்து, ‘சமயாதீத’ மென்றும் ‘சமயங் கடந்தமோன சமரசம்’ என்றுந் திருவாய் மலர்ந்தருளுவாராயினர்.

இதுகாறுங் கூறியவாற்றால் எல்லாச் சமயங்களும் இறைவனால் தோற்றுவிக்கப்பட்டன வென்பதும், அவை அவ்வப்பக்குவ

முடைய ஆன்மாக்களால் சோபான முறையாகக் கொள்ளப்படுவனவென்பதும், அவற்றிலே கூறப்படும் பொருள்கள் யாவும் சைவ சமயத்தின் கண்ணே யடங்கிக் கிடக்கின்றனவென்பதும் சைவசமயம் அவ்வளவோ டமையாது மேற்சென்று பல அரிய வுண்மைகளை எடுத்து விளக்கி மகோன்னத நிலையிற் செலுத்துகின்ற தென்பதுங் கொள்ளப்படும்.

இனி, சைவ சமயத்தில் எல்லாச் சமயப் பொருள்களும் அடங்கி நிற்குந் தன்மையையும், அஃது எவற்றினும் மேற்போந்து எடுத்துக்காட்டும் நுண்ணிய நிலையைக் குறித்தும் சிறிது ஆராய்வாம்.

முதற்கடவுளைப் பற்றிக் கூறுங்கால் வைணவ சமயம் தாம் கொண்ட முதற் கடவுளுக்கு இறப்புப்பிறப்புக்களைக் கூறுகின்றது. அன்றியும், அஃது அக்கடவுளுக்கு உயிர்க் குணங்களைக் கற்பிக்கின்றது. இது முதற் கடவுளுடைய இலக்கண மன்றென்பது யாவர்க்கும் வெளிப்படை. தத்துவ முறையில் அச்சமயம் இருபத்துநான்கையே ஒப்புக்கொள்ளுகின்றது. சைவசமயமோ இருபத்துநான்கு தத்துவங்களுக்குமேல் பன்னிரண்டு தத்துவங்களைக்கொண்டு தத்துவங்கள் முப்பத்தாறெனக்கூறுகின்றது. இவ்விரண்டொரு காரணங்களினாலேயே சைவ சமயம் வைணவ சமயத்தின் பொருள்களை உள்ளடக்கிக்கொண்டிருத்தல் இனிது விளங்கும்.

இனி, சாங்கிய தத்துவம் முதலிய ஆறு தரிசனங்களும் கூறும் பொருள்களும் சைவசமயத்தில் அடங்கியிருத்தலையும், சைவம் அவற்றிற்குமேல் வீறுதலையும் இரண்டொரு விஷயங்களில் காணலாம். சாங்கியர் உலகத்திற்கு முதற்காரணமாக மூலப்பகுதியைக் கொள்ளா நிற்ப, சைவ சித்தாந்திகள் மூலப் பகுதியின்மேலும் அசுத்தமாயை, சுத்தமாயை என்பனவற்றைக் கொள்ளுதலும், மீமாஞ்சகர் கருமத்தையே கொண்டு ஞானத்தை யிகழ்தலும், மாயாவாதிகள், ஞானத்தையே கொண்டு கன்மத்தை யிகழ்வதும் செய்யா நிற்ப, சைவ சித்தாந்திகள் கன்மம், ஞான

மென்னு மிரண்டையுங் கொண்டு, அவை தமக்கும் அவரினும் மேம்பட்டுத் திருவருளையும் இன்றியமையாத் துணையாகக் கொள்ளுதலுங் காண்க.

இனி, பௌத்தம் முதலிய புறப்புறச் சமயங்களையும் சிவாத்துவிதம் முதலிய அகச் சமயங்களையும் அவற்றின் பொருள்களையும் சைவத்தோ டொப் பவைத்துக் கண்டுதெளிக. விரிப்பிற் பெருகும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, சைவ சமயத்தின் மாட்சி, அஃது எல்லாச் சமயங்களையு மேற்றுக் கொள்வதனாலும், அச் சமயப் பொருள்களை யெல்லாம் தன்னகத்தே கொண்டிருத்தலினாலும், அச்சமயங்களுக் கெல்லாம் மேலாகச் சாலவு முயர்ந்த மிக நுண்ணிய அப்பாற்பட்ட நிலையை உணர்த்துவதனாலும், தனி முதற் பரம்பொருளி னிலக்கணத்தை வழுவின்றி ஒழுங்குற எடுத்துக் காட்டுவதனாலும் நன்கு தெளியப்படும். இவ்வாறன்றி, அபிமானங் காரணமாகச் சைவசமய மாட்சி சொல்லப்பட்ட தன்றென்பதை, நடுநிலையுடைய பேறிஞர் உண்மை ஒன்றே காணும் உள்ளத்தராய், சைவசமய நூல்களைக் கற்பின், இக்கூறிய யாவும் மெய்ம்மையே யென்பது துணியப்பெறுவர் என்பதற்கு எட்டுணையும் ஐயமில்லை. பின்வரும் தாயுமானார் திருவாக்கு இக்கருத்துக்களையெல்லாம் விளக்கும் வனப்பு எம் உள்ளத்தை வீற்றிருக்கையாகக் கொள்ளுதலின் அதனை ஈண்டெடுத்துக் காட்ட விழைகின்றேம்.

'இயல்பென்றுந் திரியாம லியம மாதி
  யெண்குணமுங் காட்டியன்பா லின்ப மாகிப்
பயனருளப் பொருள்கள்பரி வார மாகிப்
  பண்புறவுஞ் சௌபான பக்ஷங் காட்டி
மயலறுமந் திரஞ்சிக்ஷை சோதி டாதி
  மற்றங்க நூல்வணங்க மௌன மோலி
அயர்வறச்சென் னியில்வைத்து ராசாங் கத்தி
  லமர்ந்ததுவை திகசைவ மழகி தந்தோ.'

பத்திராசிரியர்.

திருநான்மறை விளக்கம்

(கஅஎ-ம் பக்கத் தொடர்ச்சி.)

உமாபதி சிவமும் 'ஆதிமறையோதி யதன்பய னென்று மறியா வேதியர் சொல் மெய்யென்று மேவாதே' என்று கூறி யதன் மேலும் பண்டைத் தமிழ்மறையின் பொருளை விளக்கும் மூவர் தேவாரம் சிவபெருமானாகிய ஒரே கடவுளைப் பற்றிக் கூறுவது என்னும் பொருளில் 'அருமறையைச் சிச்சிலி பண்டருந்தத் தேடு மதுபோலன்று இது என்று முளதாம் உண்மைப் பரபதமும் தற்பரமும் பரனே யன்றிப் பலரில்லை என்றெழுதும் பனுவல்' என்றருளிச் செய்தமையுங் காண்க. ஸ்ரீமத் அப்பர் சுவாமிகள்,

'கங்கையாடி லென் காவிரியாடிலென்
... ...
... ...
எங்குமீச னெனாதவர்க்கில்லையே' என்றும்,

'சாத்திரம் பலபேசுஞ் சழக்கர் காள்
கோத்திரமுங் குலமுங் கொண்டென் செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதி ரேல்
மாத்திரைக்கு ளருளு மாற் பேறரே' என்றும்,

கோலும் புல்லு மொருகையிற் கூர்ச்சமும்
தோலும் பூண்டு துயாமுற் றென்பயன்
நீல மாமயி லாடு துறையனே
நூலும் வேண்டுமோ நுண்ணுணர்ந் தோர்கட்கே'

என்றும் இரங்கிக் கூறினமையுங் காண்க. ஸ்ரீமத் மாணிக்க வாசக சுவாமிகள் வேதக்கிரியா காண்டத்தை மாத்திரம் சிறப்பாகக் கொள்வோரை மறுக்கு முகத்தான் 'விரதமே பரமாக வேதியரும் சரதமாகவே சாத்திரங் காட்டினர்' என்றும், ஆரியரது ஏகான்மவாதக் கொள்கையை மறுக்குமுகத்தான் 'மிண்டிய மாயாவாதமென்னும் சண்டமாருதஞ் சுழித்தடித்தார்த்து' என்றும், கடவுள் திருமறையைக் குறிக்கு மிடத்து 'மிக்கவேத மெய்

நூல் சொன்னவனே' என்றும், ஆரிய வேதங்களைக் குறிக்கு மிடத்து 'வேதங்க ளையா யெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணி யனே' என்றும், ஆகமங்களைச் சிறப்பிக்கு முறையால் 'ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க' என்றும் அருளிச்செய்தமை உற்று நோக்கத்தக்கது. 'நினைத்தனை வேதங்குன்று' என்ற விடத்து வேதம் என்ற சொற்குப் பொருள்: ஞானநூல் கூறும் இலக்கணம் என்பது.

இதுகாறுங் கூறியவாற்றால் ஆரியப் பிராமணர் எவ்வாறு 'பார்ப்பார்' 'அந்தணர்' எனப்பட்டார் என்பதும், 'நான்மறை' 'வேள்வி' என்பதற்குத் தமிழ் நூற்கும் வடமொழி நூற்கும் இயைய எவ்வாறு பொருள் கொள்ளவேண்டுமென்பதும், அச் சொற்களின் வழக்க வரலாற்றின் சுருக்கமும் ஒருவாறு காட்டப் பட்டன.

வடமொழி வேத வரலாறும், தேவாரத்துட் கூறும் தமிழ் நான்மறை வரலாறும் தம்முள் வேற்றுமையுடையன. இந்நில வுலகத்திலே ஆல நிழற்கீழ் அருள்பெற்ற முனிவர் நால்வரும் செய்த மறைகளே தமக்கு முற்பட்ட மறைகளாகத் தேவார கருத்தாக்கள் குறித்துள்ளார்கள். உலகத்தில் எவ்விடத்தில் முனி வர் நால்வரும் அருள் பெற்றிருத்தல் கூடுமென் றாராயுமிடத்துச் சரித்திர ஆராய்ச்சியாற் றெளிவாகும் உண்மையொன்று கவனிக் கத்தக்கது. மரநிழலின் கண்ணே வடிவ வழிபாடு செய்தல் தமி ழர் வழக்கமென்பது தென்னாட்டுச் சிவதலங்கள் ஒவ்வொன்றி லும் சிவலிங்கமுள்ள விடத்தே புண்ணிய மரமொன்று அதன் ஆதியிடமாகச் சுட்டப்படுகின்றது. திருக்கோயில் அமைவதற்கு முன்னரே அம்மரத்தின் அடியில் கடவுளை வழிபட்டார்கள் என்பது தெளிவு. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரத் தில் முனிவர் நால்வரும் அருள் பெறுவதற்குமுன் 'ஓரால் நிழ லொண் கழலிரண்டும் முப்பொழுதேத்தினர்' என்று கூறப்பட் டது. ஆதலால், தமிழருடைய வழிபாட்டு வணக்கமிருந்த நாட் டிலேதான் நான்மறைகள் தோன்றியிருத்தல் கூடுமென்று யூகிப் பதற்கு இடமுண்டு. திருமறைக்காடு என்னுந் தலத்திற்கு அருகே

கல்லால மரமீழலிருப்பதாகத் தெரிகின்றது. அவ்விடத்தில் நான் மறைகள் கடவுளைப் பூசித்ததாகக் கூறுவதன் பொருள் யாதெனில் அவற்றை யுணர்ந்தோர் பூசித்தார் என்பதே. ஆதலால் அவ்விடமே நான்மறை வெளிப்பட்ட இடமாயிருத்தலுங்கூடும். பண்டைத் தமிழ் நான் மறைகள் மறைந்த பின்பு அவற்றை யுணர்ந்தோரால் மூடப்பட்ட திருக்கோயிற் கதவு தேவாரத் தமிழ்மறை அருளிச்செய்த பெரியோரால் திறக்கப்படுதல் பெரிதும் இயைபுடையதொன்றே. பழந்தமிழ் நூல்கள் யாவற்றுள்ளும் 'ஆலமர் கடவுள்' 'ஆலமர் செல்வன்' எனச் சிவபிரானை விதந்தோதுவதும், தமிழந்தணர்க்குக் கூறிய கமண்டல முதலிய அடையாளங்களையே அவர்க்குக் கூறுவதும் அவர் 'தமிழ்மறை முதல்வர்' என்பதற்குத் தக்க சான்றாகும்.

'சீர்மிகு சிறப்பினோன் மாமுதற் கைசேர்த்த
நீர்மலிகரகம் போற் பழந்தூங்கு முடத்தாழை'

என்ற கலித்தொகை(செய்யுள்-133) யடியுங் காண்க. தமிழ் நூல்களுள் வியாசர் காலத்திற்கு முன்னும் பின்னு முள்ள தோல்காப்பிய முதல் எல்லா நூல்களிலும் நான்மறை என்ற வழக்கே காணப்படுகின்றது; மும்மறை யென்பதில்லை. ஆனால் ஆரியர்கள் தமது வேதம் மூன்றென்ற கருத்தில் 'வேதத்திரயி' என்று வழங்குதல் காணப்படுகின்றது. வியாசர் இருபத்தெண்மர் என்று வடமொழியாளர் கூறினும் தேவாரத்துள் அவருள் ஒருவரைப் பற்றியாவது நான்மறை வகுத்தார் எனக்கூறியதாகத் தெரியவில்லை.

இனி, அருள் நூல்கள் யாவும் பிரணவ மந்திரத்தினின்று வெளிப்பட்டன வென்பதைக் கருதுமிடத்துப் பிரணவ மந்திரம் ஆதியில் தமிழிலிருந்ததாகத் தெரிவதால் அருள் நூல்களும் தமிழிலேயே இருந்தன வென்று கருத இடமுண்டு. ஓம் என்ற சொல்லிற்குப் பாதுகாத்தல் என்ற பகுதிப் பொருள் தமிழிலேயுள்ளதென்பது அதனடியாகப் பிறந்த ஓம்பு என்பதன் பொருள் அஃதாதலின் வைத்துணரப்படும். பிரணவத்திற்கு அப்பொருளுண்மை வடமொழிக் கூர்மபுராணத்துட் கூறப்பட்டுள்ளது. வட

மொழியிலே ஓம் என்ற சொல் 'அவ' என்றதன் மரூஉ என்று கூறப்படுகின்றது. அது மொழிநூன் முறைக்கு முற்றும் முரணு கின்றது. ஓம் என்ற பகுதியினடியாகப் பிறந்த சொற்கள் யாவும் வடமொழியி விருப்பனவாகத் தெரியவில்லை. ஓம் என்பதற்கு முண் டகம் முதலிய உபநிடதங்கள் கூறும் வரிவடிவமும் தமிழிலே தான் காணப்படுகின்றது. தமிழ் ஓங்காரமும் ஓங்கார தெய்வ மாகிய பிள்ளையாரது திருமுக அமைப்பும் ஒத்திருத்தல் காண்க. உகாமும் அகரமும் முறையே கலந்தவிடத்து ஓகாரம் எழுதல் ஒலிநூல் விதிக்கு ஒத்தது. அஃதே தமிழிலும் விதியாக உள்ளது. அகர உகரம் ஔகாரமாகும். அது வடமொழியில் விதித்தது போல ஓகாரமாகு மென்று கொள்ளுதல் ஒலிநூற்கு இயைந்த தில்லை. ஆதலால் பிரணவத்தின் ஒலி யமைப்பும் சத்தி யெழுத்தை முதற்கண் வைக்கும் தமிழர் வழக்கிற்கு ஒத்ததாயுள்ளது. இனி நூற்பிரமாணங் கருதுவார் 'கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழாற் பகர்வோனே' என்ற திருப்புகழை நோக்குக. 'அரிய தமிழ் தானளித்த மயில்வீர' என்று தனக்கு உபதேசஞ்செய்த மந்திரத்தைத் தமிழென அருணகிரி நாதர் கூறியதுங் காண்க. ஞானேபதேசஞ் செய்யுங்கால கடவுள் பிரணவத்தை விளக்குகின்றார் என்பது 'என்னையோர் வார்த்தை யுட்படுத்துப் பற்றினாய்' என்று ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் கூறியருளியதாலும் இவ்வியாசத் தொடக்கத்திற் கூறிய சுவாயம் புவாகமக் கருத்தாலும் உய்த்துணரப்படும். 'ஓங்காரத்துட் பொருளை யத்தனெனக் கருளியவாறு' என்றதுமது. திருமூல மாமுனிவர் சதாசிவம், தத்துவம், முத்தமிழ் வேதம் என்று கூறியவிடத்து முத்தமிழ் வேதம் என்று சுட்டப்பட்டது, அருள் நூல் மூலமாகிய சுத்தவித்தையை. அங்கே முத்தமிழ் என்றது பிரணவத்தை. முத்தமிழ் என்று பிரணவத்தைக் கூறுவது தமி ழறிவர் (சித்தர்) நூல் வழக்கு. வேதம் என்பது ஞான நூலை. சைவக்கருத்தின்படி சுத்த வித்தியாதத்துவத்திலே எல்லா மந்திரங்களும் அவற்றிற்கு மூலமாகிய ஓங்காரமு முள வெனக் கூறுங் கொள்கையை த்அ தத்துவத்தைக் குறிக்க வந்தவிடத்து அதனை 'முத்தமிழ்வேதம்' என்று கூறு

முகத்தால் விளக்கினர். தமிழானது மறைகளும் மந்திரங்களும் கூறுதற்குரிய மொழியாதலால் தேவாரத்துள்ளும் 'ஓமென்று மறை பயில்வார்' என்று ஞானசம்பந்தப்பெருமான் அருளிச் செய்தனர். முத்தமிழாகிய ஓமென்பதினின்று வேதாகமங்கள் வந்தனவென்று சொல்வதன் பொருள் மேற்கூறிய திருமூல நாயனர் வாக்கினுலேயே இனிது விளங்கும். அதாவது தக்க தவத்தோர்க்கு ஓங்காரத்துட் பொருளை விளக்கு முகத்தால் உண்மை நூலறிவை இறைவன் தர அவர்கள் அதனைக் கடைப் பிடித்துக் கூறிய அருள் நூல்களே வேதாகமமா மென்பதே. பிரணவத்தை முதுமொழி என்று கூறுதலுந் தமிழர் வழக்கு. 'முக்கோல்கொளந்தணர் முது மொழி' என்ற கலித்தொகையும் அது. முத்தமிழ், முதுமொழி, ஓங்காரம், ஒரு சொல் முதலிய சொற்களால் பிரணவத்தைக் குறிப்பது தமிழர் வழக்கு. 'நீரெ ழுத்துக் கொத்தவுட னீத்தார்க்கு நீகவில்வ தோரேழுத்தே' என்ற குமரகுருபர சுவாமிகள் காசிகலம்பகத் திருவாக்கானு ணர்க. பிரணவ மொழிந்த பிறமந்திரங்களும் தமிழர்க்குரியனவே யென்பது தந்திர நூலுணர்ச்சி யுடையார் யாவர்க்குந் தெரிந்த தொன்றே. மந்திரங்கள் என்பவை பல திறப்படும். அவற்றுள் 'இந்திராயநம' 'வருணயநம' என்பன இறுதிமாத்திரம் மந்திர மாக வுடையன. அவை அத்துணை சிறந்த மந்திரங்களல்ல. 'நம' 'சுவாஹா' 'சுவதா' முதலிய ஏழு அந்தங்களும் தமது ஒலிக்குறிப் பால் வெவ்வேறு ஆற்றலுடையன. அவை சிலவற்றுள் வழங்கும் எழுத்தொலி தமிழ்மறைகளுள் மாத்திரங் காணப்படுவன. ஏனைய இலக்கியங்களிலும் மொழியிலுங் காணுமையால் அவை தமிழுக்கு உரியனவல்லவென்று கோடல் தவறு. ஓஹோ என்றவிடத்து 'ஹோ' என்ற சப்தம் தமிழிலில்லை யென்றுகொண்டு வடமொழி யில் ஒலிக்குறிப்பு நிகழ்த்தியதாகக் கூறுவது தவறுதல் காண்க. மந்திரமென்ற மறைமொழியுள் மாத்திரம் பயிலும் ஓசைகள் சில வற்றை மொழிப்போக்கில் வழங்குதல் தமிழ் வழக்கமில்லை. அது கொண்டு தமிழில் மறை யில்லை யென்று கூறுவது பொருந்தாது. மறைமொழி தமிழில் உண்டென்று தோல்காப்பியக்கட்டளை இனிது விளக்குகின்றது.

இனி, வித்தெழுத்து எனப்படும் பீஜ மந்திரங்கள் வேதத்திற் கூறப்படவில்லை யென்றும், தந்திரத்திற்கே உரியனவென்றும், தந்திர நூல் ஆராய்ச்சி வல்லார் Sir John Woodroffe என்பவர் கூறியிருக்கின்றார். தந்திரமென்ற சொல் நூல் என்பதன் நேர் மொழிபெயர்ப்பு. வடமொழியிலே தந்திரப் பக்கமும் வைதிகப் பக்கமும் வேறு வேறாகக் கருதப்படுகின்றன. தந்திரம் வைதிக நூல்கட்குப் பின் உண்டாயினவென்பது வைதிகர்களுடைய கருத்து. தந்திரம் என்ற சொல் நூல் என்று தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்று கொண்டால் அது சரித்திரத்திற்கும் தமிழ் வழக்கிற்கும் விரோதமாக விருக்கின்றது. வியாசர் வகுத்த வேதங்கட்கு முன்னேயுள்ள தொல்காப்பியத்திலே நூல் வழக்குப் பேசப்படுகின்றது. நூல் என்ற சொல்லானது தமிழிலே பெருவழக்காயிருப்பதுபோலத் தந்திரமென்ற சொல் வடமொழியிலே எல்லா இலக்கியங்களையுங் குறிப்பதற்குப் பயன்படுதவில்லை. தந்திரமென்பது வைதிகத்தின் வேறாய் ஒருவகைத் தொகை நூற்கே வடமொழியிற் பெயராயிருப்பத், தமிழிலே நூலென்பது வடமொழியிலே தந்திரங்கள் உண்டாவதற்கு முன்னேயே பெருவழக்காய்த் தமிழ்தோன்றிய காலந்தொட்டு உண்டாயதுபோற் றோன்றுகின்றது. ஆதலால் நூல் என்பதே வடமொழியில் தந்திரமென்று மொழி பெயர்க்கப்பட்டதென்று கொள்ளுதலே பொருத்தமுடைத்து. மாறிக்கொள்ளுதல்பொருத்தமின்று. வைதிகர்கள் தந்திரவழியொழுகினோர் மூடரென்றும் தந்திரம் நிரயத்துய்க்குமென்றும் கருதுவதனாலேயும், வைதிக சம்பந்தமாய் அறுவகைத் தத்துவக்கொள்கைகளோடு தந்திர நெறிக் கொள்கைகளைச் சேர்க்காமையாலும், தந்திர நெறியினர் அவற்றைப் புறச்சமயங்களாகக் கருதுவதனாலும், தந்திர மார்க்கத்துக்குரிய வழிபாட்டு முறை மருத்துவம், சட்டம் முதலிய பலவற்றில் வைதிகத்தினின்றும் வேறுபாடு காணப்படுவதனாலும், இருமார்க்கத்தாரும் வேறு வேறு நாகரிகமுடையார் என்பது யூகிக்கப்படும். ஆனால் தந்திர வழக்கங்களையும் முறைகளையும் தமிழ்ச் சித்தர் நூல்களோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இரண்டும் ஒரு தன்மையனவாயிருத்தலாலும், தந்திரம் யாவற்றுள்ளும் சிவ வழிபாடு

கூறுதலாலும், அவையெல்லாவற்றுள்ளுஞ் சிறந்த 28 சைவநூல் களையும் தென்தமிழ் நாட்டு மகேந்திரமலையில் சிவபெருமான் அருளியதாகத் தெரிதலாலும், தந்திரத்திற் கூறப்படும் வித்தெழுத்துக்கள் யாவும் தமிழ்ச்சித்தர் நூல்களுள் மிக்குப் பயிலுதலாலும், வடமொழியில் தந்திரம் ஏற்படுதற்கு நெடுநாட்கு முன்னரேயே ஆகம மெனப்படும் அருள்நூல்கள் தென்தமிழ் நாட்டில் எழுந்தமையானும், வடமொழித் தந்திரங்கள் தமிழ் அருள் நூல்களின் மொழிபெயர்ப் பென்பதும், தந்திர நாகரிகம் தமிழர் நாகரிகமென்பதும்,உய்த்துணரப்படும். அதனால் வித்தெழுத்துக்களாகிய சிறந்தமந்திரங்கள் ஆதியில் தமிழிலிருந்தனவென்பதும்,அவையே இன்றுள்ள வடமொழித் தந்திரத்தும் தமிழ்ச்சித்தர் நூலுள்ளும் பயிலுகின்றன வென்பதும் உய்த்துணரப்படும். வித்தெழுத்துக்களே மந்திரங்களுட் சிறந்தவையாய்ப் பெரும்பயன் விளைப்பன. ஆதலால் உண்மை நல்மந்திரங்கள் தமிழிலேயே ஆதியிலிருந்தன வென்பது தெளியப்படும். இனி இன்னொருவகையான மந்திர முண்டு. அதாவது ஒரு சொல்லின் ஒவ்வொரு எழுத்தும் அடையாளப் பொருள் தனித்தனி பயப்ப, அவற்றின் தொகைப் பொருளை விளக்கும் வாய்பாடாக அம் மந்திரச்சொல் அமைந்திருத்தல் கூடும். ஐந்தெழுத்து மந்திரம் அவ்வகைத்து. ஐந்தெழுத்திற்கும் வெவ்வேறு பொருள் கொள்ளல் வேண்டும். அதுதான் அம் மந்திரத்தின் சிறப்புப் பொருள். அச் சிறப்புப் பொருளில் ஆகமத்திலும் திருமூலர்முதலிய அறிவர் நூலிலுந்தான் அது வழங்குகின்றது. வைதிகர் அதற்கு வளமில்லாத பொதுப் பொருளே கொள்வர். ஆதலால் அவர்க்கது மந்திரமாகாது. அம்மந்திரத்தின் சிறப்புப்பொருளே தேவாரத்துள்ளுங் கொள்ளற்பாற்று. பொதுப் பொருள் கொள்வது பொருத்த மில்லை யென்பது 'நாதநாம நமச்சிவாயவே' என்பதற்குப் பொருள் விரிப்பின் விளங்கும். நாதனுடைய நாமம் 'நமஸ்காரம் சிவனுக்கு' என்று பொருள்கொள்வது எவ்வளவு பொருத்தமில்லாத தென்பதை உற்று நோக்குக. சிறப்புப்பொருளில் ஐந்தெழுத்தும் தமிழ் மந்திரமே.

இதுகாறுங் கூறியவாற்றல் மந்திரங்கள் எனப்படும் ஓங்காரமும் பிற சிறந்த மந்திரங்களாகிய மறை மொழிகளும் ஆதியில் பயின்று வந்தமொழி தமிழே என்று தெரிதலால் பண்டை நான் மறைகளும் தமிழிலே யிருந்தன வென்பதற்கு அதுவுந் தக்க துணைச்சான்றாகும் என்பது கூறப்பட்டது.

கல்லால மரநிழலின்கண்ணே நான்கு முனிவர்க்கு அருள் செய்தமை வடமொழி வேதத்துள்ளுங் கூறப்படுகின்றது. ஆனால் அவர்கட்கு அருளிச் செய்த வேதம் தானே யென்று அது கூறிற்றிலது. மேலும் அருளிச்செய்த கடவுளைப் பற்றிப் பண்டைத் தமிழ் நூலோர் 'சீர்மிகு சிறப்பினோன்' 'ஆலமர் செல்வன்' என்ற பெயர்களால் குறித்தனரே யன்றித் தென்முகக்கடவுள் என்று விதந்தோதிற்றிலர். ஆனால் வட நூலோர் அக்கடவுளைத் தக்ஷிணாமூர்த்தி யென்று கூறுகின்றார்கள். தக்ஷிணாமூர்த்தி யென்ற சொற்குத் தெற்குக்கடவுளென்பதே நேர்பொருளாகத்தெரிகிறது. ஸ்ரீமான் மாணிக்கவாசக சுவாமிகளும் 'தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றமையாலும் தென்னாட்டிலே கடவுள் நால்வர்க்கு மறை அருளிச்செய்தார் என்பது யூகித்தற்பாலது. தென்னாட்டில் எழுந்த மறை தமிழ் மறை யாதல் தெளிவு.

இனி, வடமொழி வேத வரலாற்றைக் கூறும் வாக்கியங்களை ஆராய்வோம். வேதமானது பிரமாவினுடைய நான்கு முகத்தினின்றும் நான்கு வேதங்கள் தோன்றின வென்பது பிராமணருடைய கொள்கை. சைவருள் ஒரு சாரார் சிவபெருமானுடைய நான்கு முகத்தினின்றும் நான்கு வேதங்களுந் தோன்றின வென்பர். அங்ஙனஞ் சொல்லுகின்ற இருதிறத்தாரும் எவ்வேதம் அவ்வாறு தோன்றிற்றென்ற கேள்விக்கு அது இப்பொழுதுள்ள வடமொழி வேதம் என்கிறார்கள். இப்பொழுதுள்ள வடமொழி நான்கு வேதங்களையும் நாம் பார்க்குமிடத்தில் அவற்றுள் அவை பிரமாவினாலாவது சிவபெருமானினாலாவது செய்யப்பட்டன வென்பதற்கு அவற்றுள் பிரமாணம் யாதுங் கண்டிலம். உபநிடதமொன்றில் வேத இதிகாச புராண மெல்லாம் பரம்பொருளின்

சுவாச மென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது சமயநூல் யாவற்றிற்கும் பொதுவான வாக்கியமாய், 'எல்லாங் கடவுள் செயல்' என்பது போன்ற பொதுப் பொருளே கொள்ளற் பாலதாய் நிற்கின்றது. வேதத்திலுள்ள ஒவ்வொரு பகுதியும் இன்ன இன்ன ருஷிசொன்னார் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அக்கினியைப் பற்றிய தோத்திரத்தை ஒரு இருடி சொன்னார் என்று கூறுமிடத்து அந்த இருடி அந்தத் தோத்திரத்தைப் பிரமாவினிடமாவது கேட்டாரென்று சொல்லப்படவில்லை. சுருதியென்ற சொல்லிற்குக் கேட்கப்பட்டது என்று பொருள்கொள்வது சரியே. அது எதைக் காட்டுகின்றதென்றால் மொழிக்கு வரிவடிவில்லாத காலத்தில் ஒரு தெய்வத்தை யொருவன்பாட அவனுடைய சந்ததியார் அப்பாடலைக் கேள்விமுறையாகத் தங்கள் பரம்பரையிற் பாதுகாத்து வந்தனர் என்பதே குறிக்கப்படுகின்றது. மேற்கூறிய காரணத்தால் இப்பொழுதுள்ள வடமொழி நான்கு வேதங்களும் பிரமவாக்கு அல்லது சிவவாக்கு என்று சொல்வதற்குச் சான்றுகள் யாதுமில்லை. பிரமாவினிடத்தே தோன்றும் போதே வேதம் நான்காயின் அது பலவாயதெப்போது? வேதம் அநந்தம் என்ற வாக்கியம் வடமொழி நால் வேதத்தை எவ்வாறு குறிக்கும். நால்வேதங்கள் இருந்தன வெனவே அவற்றின் பகுதிகளும் ஓரளவுட்பட்டனவாக இருந்திருக்குமாதலால் அவற்றையுங்கூட வேதம் அநந்தம் என்ற வாக்கியத்தால் குறிக்கக் காரணமில்லை. அல்லது அநந்தம் என்பதற்கு அந்தமில்லாததென்று பொருள் கொள்ளாமல் பல என்று பொருள் கொள்ளவேண்டும். வேதம் அநந்தம் என்பதற்கு நூல்பல அல்லது அறிவு எல்லையில்லாதது என்று கோடலே பொருத்தமுடைத்து. முதலிலே வேதம் நான்கானால் அவை எங்ஙனம் நாலென்ற முறைதப்பிப் பலவாய்க் குழப்பமடைந்து (28) இருபத்தெட்டு வியாசர்களால் மீண்டும் மீண்டும் நான்காகப் பகுக்கப்பட்டன என்பதைப் புலங்கொள விளக்கும் சரித்திரம் யாதுமில்லை. எவ்வாறாயினும் இப்பொழுதுள்ள நான்கு வேதங்கள் அயன்வாக்கல்ல வென்பது அவற்றை நேரிற் படித்த யாவரும் மறுக்க வொண்ணாத ஒரு உண்மை.

ஆயின் பிரமவாக்கு சிவவாக்கு வேதம் என்று சொல்வதற்குக் காரணம் யாதென்று ஆராய்தல் வேண்டும். ஒவ்வொரு அண்டத்திலும் அதனைப் படைக்கும் ஒரு தெய்வம் பிரமாவெனப்படும் என்றும், அப்பிரமாவும் கடவுளல்ல வென்றும் ஞான நூலோர் கூறுகின்றார்கள். படைப்பவன் கடவுளல்லவனாகவே அவன் கடவுளிடத்தினின்று படைப்பின் முறையைக் கற்பவனாதல்வேண்டும். அங்ஙனம் அவன் கற்றதைத் தன் ஏவலாளர்க்கு அறிவித்தலும் இயல்பே. அதனை 'ஆதியிற் பிரமனார் தாம் அர்ச்சித்தார்' என்றும் 'ஓதிய வேதநால்வர் உணருமாறுணரலுற்றார்' என்றுமுள்ள தேவாரப் பகுதிகளால் உய்த்துணர்ந்து கொள்க. பிரமன் நாற்றிசையிலும் அதிகாரமுடையன் என்பதை விளக்க அவனுக்கு நான்கு முகங்கூறவே அவன் தனது ஏவலாளர்க்குக் கூறிய சொற்றொகையும் நான்கெனக் கூறப்பட்டன. நான் முகன் கூற்று நால் வேதம் எனவே நான்முகனுக்குக் கற்பித்த கடவுளாகிய சிவனுக்குரிய நான் முகவாயிலாக நால் வேதம் வெளிப்பட்டதென்று சைவர்கள் சொல்லுவராயினர். அங்ஙனங் கூறப்பட்ட கட்டளைக்கொத்தாவது நூற்றொகையாவது இப்பொழுதுள்ள வடமொழி வேதமாகாது. ஆயினும் இன்னொரு வகையாக வடமொழி வேதத்தையும் அயனையுந் தொடர்பு படுத்தலாம். ஆரியர் பிரமாவென்பவரே பெரிய கடவுளென்று ஒரு காலத்தில் கருதினார்கள். அது 'தைத்தரியத்'தில் ஆனந்த வகையைச் சொல்லும்போது பிரமனுடைய ஆனந்தத்தைச் சொல்லி அஃதே உயர்ந்ததென்று முடித்துவிட்டமையான் விளங்கும். ஆரியாது பஞ்சமகாயஞ்ஞங்களுள் பிரமயஞ்ஞம் உயர்ந்ததாகவும் அதற்குப்பின் தேவயஞ்ஞம் வேறு என்றும் பிரித்தமை காண்க. வடமொழி வேதத்துள் முதலாவதாகிய இருக்கு வேதத்துள் கூறப்பட்ட திக்குப்பாலகர் முதலிய தெய்வங்கள் பிரமாவிற்குக் கீழ்ப்பட்டோர் என்ற கொள்கை எழுந்த காலத்தே அத்தெய்வங்களை வழிபட்டோர் கூறுந் தோத்திரங்களை அத்தெய்வங்கள் பாடுவிக்கும் பாட்டென்ற கருத்தில் அவற்றை அத்தெய்வங்களின் வாக்காகக் கருதிய விடத்து அத்தெய்வங்கள் பிரமாவினிடங் கேட்டுத் தமது அடியார்க்கு அவ்வாக்கை

யறிவித்தார் என்ற கொள்கை நிலைப்பதாயிற்று. இக்கொள்கையே இப்பொழுதுள்ள வேதத்தைப் பிரமவாக்கென்ற பிராமணரும் சிவவாக்கென்ற சைவரும் உபசாரமாகக் கூறுதற்குக் காரணமாயிற்று. அக்கூற்றுக்களே உண்மை யாராய்ச்சிக்குக் கூற்றமாய் முடிந்தன.

சரித்திர ஆராய்ச்சியால் விளங்கும் உண்மையைக் கருதின் இப்போதுள்ள வடமொழி வேதங்களுள் பழமையான இருக்கு வேத மந்திரப்பாடல்கள் அவை என்பதும், ஆரியர் பஞ்சாப் தேசத்தில் சிந்துநதிக்கரையில் வாழ்ந்தபோது அக்கி முதலிய பல தெய்வங்களை உபாசிப்போரால் அவை பாடப்பெற்றன வென்பதும், அக்காலத்தே அவர்கள் வடகிழக்கு இந்தியாவிலுள்ள ஜனங்களோடு சண்டை செய்தார்களென்பதும் அவர்களை வென்றும் அவர்களோடு கலந்தும் கங்கை நதி தீரம் வரை பரவியபோது வடமொழி வேதங்கள் மூன்றாயினவென்பதும், தந்திர நெறியினரோடு பழகியபின் வேதவியாசர் காலத்திலே வேதங்கள் நான்காயின வென்பதும், அங்ஙனம் ஆய காலத்தே தந்திரப்பகுதி பலவும் வேதத்திற் கலந்தன வென்பதும் அறிகின்றோம். வியாசர் காலத்திற்குப் பின்னே சிவாகமத்தின் உண்மையுணர்ந்த பெரியோர்கள் வேதத்தின் முடிந்தபொருள் சைவமென்று கோடற்குரிய வழி வகுத்தனர். அக்காலந் தொடங்கிச் சைவர்கள் யாவரும் வேதத்தின் பொருளும் ஆகமத்தின் பொருளும் முடிவில் ஒன்றே யென்ற கொள்கையைக் கடைப்பிடிப்பாராயினர். சமயாசாரியர்கள் தோன்றிய காலத்தே இக்கொள்கை நிலைபெற்றுப் பிராமணருட் பலரும் சிவபெருமானையே கடவுளென்று கொண்டு தமது வேதத்தின் உயர்ந்த கருத்தும் அஃதேயென்ற கொள்கையுடையவராய்த் தாம் செய்யும் அங்கி (அக்கி) வழிபாடு சிவவழிபாடே என்று கருதினமையால் ஸ்ரீமத் ஞான சம்பந்த மூர்த்தியும், ஸ்ரீமத் அப்ப மூர்த்தியும் பிறரும் வடமொழி வேதப் பொருள் சைவ மென்பதைத் தழுவி உரைப்பாராயினர்.

(தொடரும்)

கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L.

தமிழ்ப்புலவர் வரலாறு:

அகத்தியர்

(கசுO-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் அவர் 'இருதிணையும், ஆண்பால் பெண்பால் வினை யீறும் வடமொழிக்கில்லை. மூன்றிலிங்கமும், முதலீற்று வேற்றுமைகட் குருபுகளும் தமிழிற்கில்லை. மேலும் ஆண்டாண்டுக் காட்டுதும்' என ஓரிடத்துக் கூறி, மற்றோரிடத்து

'சில பெயரெச்சமுஞ் சில வினைத்தொகையும்
இருவகை யுவமையும் வண்ணச் சினைச்சொலும்
பண்புத் தொகையெனப் பகரும் வடநூல்'

எனச் சூத்திரஞ்செய்து, 'பகரும் வடநூலெனவே தமிழ்க் கடா தென்க' என்றும் கூறியிருப்பது தமிழியல்பும் வேறு, வடமொழியியல்பும் வேறு என அவர் கொண்டுளா ரென்பதற்குச் சான்றன்றோ? எனினும் அவர், தாம் முன்பு கூறியதனை முற்றிலும் தவறு என்று காட்டிக்கொள்ள மனம்பொருந்தாது, 'ஆயின் ஈரிலக்கணமும் ஒன்றென்று பாயிரத்திற் கூறியதென்னெனிற் பெரும்பான்மை நோக்கி யென்க' என்று கூறினர்.

ஒன்றென்பதற்குச் சிறுபான்மையும் இடமில்லை யென்பதனை, தொல்காப்பியர் ஐந்திரத்தை முதனூலாகக் கொண்டன ரென்னும் பிரயோக விவேக நூலாரது கொள்கையை மறுக்குமுகத்தானே சிவஞான முனிவர் பாயிர விருத்தியிற் காட்டிவிட்டனர். அது,

'ஐந்திர நோக்கித் தொகுத்தானெனின், தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும், குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புற மென்னும் பொருட் பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய

செய்யுளிலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாந் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்துநூல் கண்டென்பதனோடு மாறுதலானும் முற்காலத்து முதனூல் அகத்திய மென்பதூஉம், அதன் வழித்தாகிய தொல்காப்பியம் அதன் வழி நூலென்பதூஉம் துணியப்படு மென்க' என்பது.

இனி, தனித்தமிழ் முதனூலாகிய அகத்தியம் தோன்றுதற்கு முன் தமிழின் நிலைமை யாதாகுமென்று பார்ப்போம்.

அகத்தியர் பல புலவர்களோடு சங்கமிருந்து தமிழாராய்ந் தனர்; மாணவர் பலர்க்குத் தமிழறிவுறுத்தினர்; அகத்திய மென்னும் முத்தமிழிலக்கணம் அருளிச்செய்தனர்; என்னும் இச் செய்திகளே, அதற்கு முன் எண்ணிறந்த நூல்களோடு கூடித் தமிழ் தழைத்திருக்கவேண்டு மென்பதனைப் புலப்படுத்தா நிற்கும். அகத்தியம் ஒன்றையே கொண்டு நோக்குதும். ஒரு மொழியில் பெரியதோ ரிலக்கணம் தோன்ற வேண்டுமாயின் அதற்கு முன்பே நன்மக்களின் வழக்கும் செய்யுளும் அதன் கண் மலிந்திருத்தல் வேண்டும். இலக்கணங்களும் பல இருந் திருத்தல் வேண்டும்.

'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளு நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்'

என்று தொல்காப்பியப் பாயிரங் கூறுவது இவ் வுண்மையை நன்கு விளக்குவதாகும். அகத்தியத்திற்கும் இது பொருந்தும் என்க. ஆயின் அகத்தியம் முத்தமிழ்க்கும் பெரியதோ ரிலக் கணமாகலின் அது தோன்றுதற்கு அடியாக வழக்கே யன்றி எண்ணிறந்த செய்யுட்களும் இருந்திருத்தல் வேண்டு மென்பது பொருத்தமே; இலக்கணமும் வேறு இருந்திருக்க வேண்டு மென்பது என்னே? அகத்தியமே முதலிற் றோன்றிய இலக்கண மாகும்; என்னில், கூறுதும். ஒருமொழியானது தோன்றி

எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாயின பின்பே அது முற்றிலும் திருந்திய நிலையடையப் பெறுவதாகும். அதற்கு முன்பெல்லாம் வழக்கும் செய்யுளும் இலக்கணத்திற்கும், இலக்கணம் வழக்குச் செய்யுள்களுக்கும் ஆக இங்ஙனம் ஒன்றுக்கொன்று ஆதாரவா யிருந்து நாளடைவில் மொழியானது வளர்ச்சியும் திருத்தமும் அடைந்து வந்துகொண்டிருப்பதே இயற்கை. அவ்வாறன்றி, முதன் முதலாகவே ஓர் பேரிலக்கணம் ஏற்பட்டு விட்டதென்பது இயற்கைக்கு ஒத்ததாகாது. அன்றியும் அகத்தியர் சூத்திரத் திருந்தே அவர்க்கு முன் வேறு இலக்கணம் இருந்தமை அறியப் படுகின்றது. யாப்பருங்கல இறுதிச் சூத்திர விருத்தியில் அகத் தியனாரது சூத்திரமாக எடுத்துக்காட்டப் பெற்றுளது பின் வருவது:

“ களவினுங் கற்பினுங் கலக்க மில்லாத்
தலைவனுந் தலைவியும் பிரிந்த காலைக்
கையறு துயரமொடு காட்சிக் கவாவி
எவ்வமொடு புணர்ந்து நனிமிகப் புலம்பப்
பாடப் படுவோன் பதியொடு நாட்டொடும்
உள்ளுறுத் திறினே யுயர்கழி யானந்தப்
பையு ளென்று பழித்தனர் புலவர்.”

இதில் ‘பழித்தனர் புலவர்’ என்று கூறியிருப்பது இதற்கு முன் வேறு இலக்கண நூல் இருந்தமையைத் தெரிவிக்கு மன்றோ?

ஆயின், அகத்தியத்தை முதனூலென்று கூறுவது பொருந் தாதாம் எனின், அன்று; முதனூலென்று எல்லா நூற்கும் காலத்தால் முற்பட்டிருக்க வெண்டுமென்பதின்று.

(தொடரும்)

பண்டிதர், மு. வேங்கடசாமி நாட்டார்.

கிரேக்க தத்துவ ஆராய்ச்சி

(௨௱௬-ம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கமும் மாறுதலுமே எல்லாப்பொருள்களி னியற்கை என்னுங் கொள்கையும், அவையின்றி நிர்விகாரமாய்ச் சலிப் பற்றிருத்தலே உள்பொருளினியல் பென்னுங் கொள்கையுந் தம்முட் பெரிதும் முரண்படுபவையாய்த் தோன்றினும், அவை யிரண்டிலுமே ஏதோ ஒருண்மைப் பகுதி இருக்கவேண்டு மென்றே ஆராயப்புகுவோ ரனைவர்க்கும் புலப்படும். இதனை வெளியிட்டவர்கள் எம்பிடாக்லீஸனும், ஆனெக்ஸகோரஸனும், அணுபரிணாமவாதிகளு மாவர். இவர்கள் சிற்சில விடயங்களிற் கருத்து வேறுபாடுடையவர்களா யிருந்தும், மேற்குறித்த உண் மைப் பகுதியை ஓரளவில் ஒரே முகமா யெடுத்துரைத்தார்கள்: கலப்பில்லா முழுமாறுதல் என்பது நிகழத்தக்கதன்று. ஒரு பொருள் சூனியத்திலிருந்து தோன்றவோ, சூனியமா யழியவோ, அன்றி அடியோடு மாறுதலடையவோ இயலாதென்பது மெய்யே, எனினும், ஒரு வரையறைக் குட்பட்டு நோக்குங்கால் தோற்றக் கேடுகள் நிகழ்வதும் மெய்யெனவே கொள்ளவேண்டும். எப்படி? உள்பொருளின் முழுவுருவில் நித்தியமாய், பிறவற்றி னின்றும் பெறப்படாதனவாய், அழிவற்றனவாயுள்ள சத்திகள் அல்லது கூறுகளுண்டு. அவை ஒருநாளும் பிறபொருள்களாய் மாறமாட்டா. ஆனல், இச்சத்திகள் அல்லது கூறுகள் பற்பல விதமாய் ஒன்று சேர்க்கப்படலாம், அப்போது பல்வேறு புதிய பொருள்கள் தோன்றும்; ஒன்று கூடிய பின்னர்ப் பிரிக்கப்பட லாம், அப்போது, தோன்றிய பொருள்கள் தம்பேரையும் வடி வையு மிழக்கும். இவ்வாறு, அழிவிலாது முக்காலத்துமுள்ள உள்பொருட்கூறுகள் தம்மளவில் தோற்றக்கேடும் இயல்புதிரிவும் எய்தாதிருப்பவும், அவைகள் கூடிப் பிரியு முறையில் புதுப் பொருள்கள் உண்டாகவும் மறையவும் இடமேற்படுகிறது. அக் கூறுகளின் கூட்டமே சிருட்டி; பிரிவே நாசம், அவற்றின் சம் பந்தமாறுதலே பொருட்புடை பெயர்ச்சி.

ஹிராக்லிடஸ்ஸூம் பார்மினடீஸூம் வெளியிட்ட பொருந்தாக் கூற்றுக்களைச் சமரசப்படுத்தி, அவையெழுப்பிய சிக்கலான வினாவிற்கு, அவர்கட்கும் பின் வந்தோர் விடை தந்தனர். 'கேவல சலனம் (தனிப்பட்ட மாறுதல்) என்பதொன்றில்லை; ஆனால் விசிட்டசலனம் (மாறுமை கலப்புற்ற மாறுதல்) என்பதுண்டு' என்று சாதித்தலில் இவர்களனைவரும் ஒன்றுபட்டவர்களே. ஆனால் இவ்வுலகிற்குக் காரணமாகிய தத்துவக்கூறுகளின் இயல்பைப்பற்றியும், அவற்றின் கூடுதல் பிரிதல்களின் காரணத்தைப் பற்றியும் வெவ்வேறு கோட்பாடுடையராயினர். அவைகளை யிங்குச் சிறிது கவனிப்போம்.

எம்பிடாக்லிஸ் (495—435 கி-மு.) என்பவர் கருத்தின்படி எல்லாப் பொருள்களுக்கும் மூலமாய், சிறப்பியல்பொடு கூடிய பூதங்கள் நான்குள. அவையாவன: பிருதிவி, அப்பு, தேயு, வாயு, இவை தனி முதற்பொருள்கள் ; மாறுதலறியாதவை ; அழிவில்லாதவை; எங்கு நிறைந்தவை. இவற்றின் சேர்க்கையால் பொருள்கள் தோன்றுகின்றன; பிரிவால் அழிகின்றன; ஒரு பொருளிலிருந்து வெளிப்படுந் துகள்கள் மற்றொருபொருளி லுள்ள தொளைகளையடைந்து பொருந்தும்போது அவ்விரு பொருளுக்குங் கலப்பேற்படுகின்றது.

இது தத்துவக்கூறுகளின் இயல்பு. இவற்றைச் சேரவும் பிரியவுஞ் செய்வது அன்பு, பகை என்னும் இரண்டு சத்திகளே. இவ்விரண்டு சத்திகளும் எப்போதும் ஒன்றாய் வேலை செய்கின்றன. இதனால் பொருள்களின் தோற்றமுங் கேடும் இடைவிடாது நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. உலக சிருட்டிக்கு முன்னர் மேற்குறித்த நான்கு பூதங்களும் ஒரு பெருங் கோளவடிவில் ஒன்று சேர்ந்திருந்தன. அந்நிலையில் அன்புச் சத்திக்கு அதிக ஆற்றலிருந்தது. நாளடைவில் பகைச் சத்திக்குப் பலம் விஞ்சியது. விஞ்சவே, ஒன்றாய்க் கலந்திருந்த பூதங்கள் எண்ணிலாத் துகள்களாக எம்மருங்குஞ் சிதறடிக்கப்பட்டுத் தனித்தனி வாளா கிடந்தன. பிறகு, இவ்வாறலங்கோலமாய்க் கிடந்த பூதங்களினிடையே அன்பு நுழைந்து ஒரு சுழற்சியை யுண்டாக்கிற்று.

இதன் பயனாய் ஓரியல்புற்ற பூதஅணுக்கள் ஒன்று கூடின. கூடவே வாயு அல்லது ஆகாயம் என்னும் பூதம் முதலிற் பிரிந்தெழுந்து வானமாய் மிளிர்ந்தது. அடுத்தாற்போல் நெருப்பு வேறுபட்டெழுந்து விண்மீன் (நக்ஷத்திரங்) களாய் விளங்கிற்று. அதன் பின்னர் நிலத்தின் சுழற்சி காரணமாக நீர்பிழிந்தகற்றப் பட்டது. இதுவே கடலாயிற்று. வானிலுள்ள நெருப்பின் சூட்டால் நிலத்தின்மீதுள்ள கடல்நீர் ஆவியாக மாறவே, காற்றுமண்டல மேற்பட்டது; அன்புச்சத்தியின் வலிமையால், எல்லாப் பூதங்களும் மீண்டும் ஒரே கோளவடிவில் ஒன்றுகூடித் தம் பண்டை நிலையடையும் வரையில் இச்சேர்க்கைகள் நிகழ்ந்துகொண்டே செல்லும். மீண்டும் முன்சொன்ன வகையில் பூதாணுக்களின் சிதறலும் கூட்டமும் நிகழும்.

உலகப்படைப் பொடுக்கமுறை யிதுவாயின் உயிர்த்திரள்கள் வந்தவாறெங்ஙனே யென்னின் எம்பிடாக்லிஸ் கூறுவார்: உயிர் வருக்கம் பூமியிலிருந்து தான் தோன்றியது. முன்னர்ச் செடிகொடியாதி ஓரறிவுயிர்கள் தோன்றின. பின்னர் விலங்குகளின் வெவ்வே றுறுப்புக்களும் மக்களின் தலை, கண், கை முதலிய உறுப்புக்களும் வெளிப்பட்டன. இவ்வுறுப்புக்கள் தாறுமாறாய் ஒன்றோடொன்று சேரப் பல்வகை விநோதமான பிராணிகள் பார்மிசை எழுந்தலவின. இருமுகமுடைய பிராணிகளும், மக்கள் முகத்தோடு பிறந்த கன்றுக்குட்டிகளும், எருதுமுகத்தோடு பிறந்த மனிதக் குழந்தைகளும் இவைபோலப் பொருத்தமில்லாவுறுப்புடைய உயிர்கள் பலவும் புறப்பட்டன. சிறிது காலத்தில் இத்தகைய உறுப்புக் கூட்டங்கள் கலைந்தன. இவ்வாறு நெடுங்காலம் இவ்வுடலமைப்பைப் பற்றிச் சோதனைகள் நடந்த பிறகு, வாழையடிவாழையாய்த் தோன்றி நின்று நிலவுதற்கு ஏற்ற உடலங்கள் ஏற்பட்டன.

எம்பிடாக்லிஸ் கொள்கைப்படி அறிவற்ற சடமென்பதொன்றில்லை; எல்லாப் பொருளுக்கும் எண்ணுஞ் சத்தியுண்டு; மனிதன் மேற் குறித்த நான்கு பூதங்களாலு மாகிறவன். பிண்டத்தில் (அவனிடத்தில்) உள்ள அப் பூதங்களாற்றான் அண்டத்

தில் (வெளியில்) உள்ள பூதங்களை அறிகிறான். வெளியிலுள்ள பொருள்களின் நுண்ணிய அணுக்கள் ஐம்பொறிகளிற் சென்று தாக்குவதால் ஐம்புலவுணர்வுண்டாகின்றது. மனிதனறிவுக்கிருப்பிடம் அவனது இருதயமாகும்.

இனி அனெக்ஸகோரஸ் கொண்ட கருத்தைக் காண்போம். இவரும் பார்மினடீஸைப் போலவே தனிச்சலனந்தான் பொருள்களின் அடிப்படையான தத்துவம் என்னும் கொள்கையையும், ஒருகுணம் பிறிதொன்றாகத் திரியும் என்னும் கொள்கையும் மறுத்து, பிரபஞ்சத்தின் சாரமான தத்துவமானது நித்தியமாயும் மாறுதலறியாததாயு முள்ளதாமென்று சாதித்தார். ஆயினும், எம்பிடாக்லிஸைப் போல பூதங்களின் சேர்க்கையாலும் பிரிவாலும் மாறுதலேற்படலா மென்றுங் கட்டுரைத்தார். ஆனால் அவரைப்போல் பூதங்கள் நான் கென்னாது, பலவென்றார். அன்றியும் எம்பிடாக்லீஸ் குறித்த நான்கு பூதங்களில் ஒவ்வொன்றும் தனிப் பொருளாகாமல் பல் பொருளிற் றிரட்சிகளா மென்றுங் கருதினார். பிரபஞ்சத்தின் மூதற்காரணமாயுள்ள எண்ணிலாத் தத்துவங்களில் பலவகையான உருவங்களும் நிறங்களுஞ் சுவைகளு மடங்கியுள்ளன. உடலுருக் கொண்டுள்ள சத்ததாதுக்களின் அணுக்களால் உலோகங்களின் அணுக்களும் அவ்வவற்றின் தன்மை மாறாமலே ஆதி முதலுள்ளன. பிறபொருள்களுடைய மூலங்களு மிவ்வாறே என்பதிவர் கருத்து.

உலகப் படைப்பைப் பற்றி இவர் சொல்லியதாவது: உலகங்கள் தோன்றுமுன் அவற்றின் மூலங்களாகிய வித்துக்கள் யாவும் ஒரே கும்பலாய்க் கலந்திருந்தன. இவ்வித்துக்கள் பரமாணுரூபத்தோடு எண்ணிலவாயிருந்தன. இத்திரளிலிருந்த வித்துக்கள் பல வேறுவகையில் கூடியதாலும் பிரிந்ததாலுமே உலகங்களுண்டாயின. ஒரே குழப்பமாய்க் குவிந்துகிடந்த திரளிலிருந்து ஒழுங்காயமைந்துள்ள உலகத் தோற்றத்துக்குக் காரணமான இப்பிரிவுஞ் சேர்க்கையும் எவ்வாறுண்டாயின வென்றால், அளப்பரிய ஆற்றலோடும் வேகத்தோடும் ஒரு சுழற்சி அத்திரளிலோர் பகுதியில் முதன்முதல் தோன்றிப் பிரபஞ்ச மூலகாரணமான வித்துக்களை

வெவ்வேறாய்ப் பிரித்தது. அச்சுழற்சி அடங்காது பரவவே, ஓரியல்புடைய அணுக்களெல்லாம் ஒன்றுகூடத் தலைப்பட்டன. இம்முறையிலே விண்ணுமண்ணும் அவற்றிலுள்ள பல்வேறு பொருளும் படைக்கப்பட்டன. ஆகாயத்தில் நிரம்பியிருந்த வித்துக்களை மழையானது சேற்றுருவத்திலிருந்த பூமியில் கொண்டுவந்து சேர்க்கவே உயிருடைப் பொருள்கள் தோன்றின. இச்சுழற்சிகளிவ்வாறிருப்பினும், ஆதியிலேற்பட்ட முதற் சுழற்சிக்குக் காரணமியாது என்னில், பிரபஞ்ச காரணவித்துக்களுக்கன்னியமாய்ப் பிரபஞ்சத்தை ஒரு நியதிக்குட்படுத்திச் செலுத்தவல்லதாயுள்ள அறிவுடைச் சக்தி யொன்றுமென்க. இச்சத்தி தன்வயமுடையது; முற்றறிவுடையது; பேராற்றல் படைத்தது; எல்லாவற்றையும் ஆளுவது. உலகங்களுக்கும் உயிர்களுக்கும் நிமித்த காரணமாயுள்ளது. சிருட்டி தொடங்குமாறு உந்திய இச் சத்தி சிருட்டிக்கப்பட்ட சித்துப்பொருள்களிலும் சடப்பொருள்களிலும் உள்ளும் புறம்புமாய் நிறைந்திருக்கின்றது.

இவ்வாறு அனெக்ஸகோரஸ் தம்மா லியன்றவரையில் சடசத்திகளையே யெல்லா நிகழ்ச்சிகளுக்குங் காரணமாகக் காட்ட முயன்று, இயக்க மாறுதல்களை விளக்க இத்தகைய காரணம் பொருந்தாத அவதியில் மட்டும் அறிவுச்சத்தியி னிருப்பை நாடுவராயினர். இவரைப் பற்றிய ஆராச்சியை இம்மட்டில் நிறுத்தி, ஒருபுடை இவரை யொட்டிப் பேசிய அணுபரிணாமவாதிகளது கோட்பாட்டைச் சிறிது தெரிந்துகொள்ள முயலலாம்.

(தொடரும்)

ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T.

தாள சமுத்திரம் உரையுடன்

இது, தாள இலக்கணம் கூறும் நூல்களுள் ஒன்றாகும். இதனைச் சோக்கர் பாதத்தின் வழிநூல் என்பர். இந்நூல் ஆசிரியர் பாத சூடாமணி.

காப்பு

ஆள......கண்ணு மலைவாய்த்
தாள சமுத்திர நூற் சாற்றவே—நாளுந்
தடத்தவளத் தந்தத் தருண கிரணக்
கடத்தவளக் கைக்களிறே காப்பு. (௧)

ஆக்கியோன் பெயர்

திண்மை பெரிய திருவடிநா யன்மங்கை
வண்மை......வளநாடன்—மண்மகள்சேர்
தோளனுலன் வண்பரத சூடா மணியுரைத்தான்
தாள சமுத்திர நூல் தான். (௨)

தாள சமுத்திரம்

தென்றல் வடிவுஞ் சிவனர் திருவடிவு
மன்றல் வடிவு மதன்வடிவுங்—குன்றாத
வேயி னிசைவடிவும் வேதவடி வுங்காணி
லாயதா ளங்காண லாம். (௩)

நூல்

எய்ந்தநெடுந் தாள மிரண்டெழுத்தின் சீர்பேர்கள்
சேர்ந்த வளவுருவந் தெய்வங்கள்—வாய்ந்தகுணம்
பேர்பெறவே யேத்தும்ப்ர மாணங் கணஞ்சாதி
பேர்சதுர மேருப் பிறப்பு. (௪)

பெறுகுசன் மேருப் பிறப்புப் பிறந்தலய
மாறிலா நல்லயதி மார்க்கங்கள்—கூறும்
ஒருமாத் திரைமான மோதுங் கிரகந்
திருவாய்த்த கஞ்சதளச் சீர். (௫)

மெச்சுமணிக் கட்டுவிரற் றெய்வம்வெவ் வேருகி
யிச்சைபெறுந் தாள மியற்றுவகை—சச்சபுட
தாளமுத னூற்றெட்டுத் தாளநிலைப் ப்ரபந்த
நீளிருப தென்றார் நினைந்து. (௬)

என்பன, இந்தமூன்று வெண்பாவினும் சொல்லிய தியாதோவெனின், தாளம் என்கின்ற இரண்டெழுத்தின் விதிகள், காலவடிவின் பெயர்கள், அந்த வடிவத்தின் அளவு, அவ் வடிவினுருவங்கள், அவற்றிற்கு அதி தேவதைகள், அந்தச் சொரூபங்கள் நிற்கும் குணகுணங்கள், அச் சொரூபங்களை யொத்து மங்குலப்பிரமாணங்கள், அஷ்டகணம், பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர ரென்கிற நாலுசாதிகள், சதுர்மேருப் பிரஸ்தாரமாகிய துரிதாதிப்பிரஸ்தாரம், சண்மேருப்பிரஸ்தாரமாகிய விராமாதிப் பிரஸ்தாரம், லயம், யதிமார்க்கங்கள், ஏகமாத்திரா லக்ஷணவிதி, சமம், அதீதம் அனாகதமென்று சொல்லப்பட்ட கிரகத்திரயங்கள், ஒத்தப்பட்ட கஞ்சதாளப் பிரமாணம், மணிக்கட்டுக்கும் விரற்கும் அதிதேவதைகள், தாளவியத்தாதி ஆவாயுதிக்குவகை, சச்சபுட முதலாகிய நூற்றெட்டுத் தாளவடிவு, நிலப்பேதத்து வருகிற புட்பபுட பிரபந்தம் ஆக இந்த இருபது கருமங்களையும் சொல்லுவாம் எ-று.

தாள மிரண்டெழுத்தின் றன்பெருமை தன்னைமிக
வாளகிரி சூழு மகிதலத்தீர்—கேளுந்
தகரவுருச் சொக்கர் தனியாம் ளகரம்
பகரங் கயற்கணியார் பற்று. (எ)

என்பது, தாளமென்கின்ற இரண்டெழுத்தில், தகரச் சொரூபம் அழகிய சொக்கநாதர்; ளகரச் சொரூபம் அங்கயற் கண்ணியார்; உபயச் சொரூபக் கூட்டரவாலே தாளமென்று பெயராயிற்று; எ-று.

வாய்ந்தகா லங்கிரிகை மான மிவைகூடி
யாய்ந்து வரிற்றாள மாமென்றார்—பூந்தொடியே
கட்டுபெருங் காலங் கணுதியொத்து கைக்கிரிகை
நட்டநடு மானமென்று நாட்டு. (அ)

என்பது, காலங் கிரிகை மானம் கூடித் தாளமென்று பெயராயிற்று. காலமென்பது, கணுதிகளாக வருகின்ற காலவடிவின் பேர்கள்; கிரிகையென்பது ஒத்துதல், ஒத்தித்தூக்குதல், ஒத்திச் சுழித்துத் தூக்குதல்,

இடம் வலம் மேல்கீழ் கைகாட்டல்; மான மென்பது, ஒத்துகை முதலாகிய கிரிகைகளுக்கு நடுநடு வருகிற குனிய காலங்கள்; எ-று.

கடிய கணமிலவங் காட்டை நிமிடந்
துடிதுரிதந் தாயலகுத் தொன்மை—நெடிய
குருப்புலுதங் காகுவெனக் கூர்வடிவு பத்தும்
விருப்புறவே காலமென வேண்டு.

என்பது கணம், இலவம், காட்டை, நிமிடம், துடி, துரிதம், இலகு, குரு, புலுதம், காகபதம் என்னும் பத்து வடிவும் காலங்களாம்; எ-று.

அர்க்க வுதயத் தலராம் புயமாத
லெற்குவளை யாதலித ழெட்டடுக்கி—நிற்குமதி
லூசி முனைதெறித்தா லோரிதழிற் செல்கால
மாசில் கணமாய் வரும்.

என்பது, ஆதித்தன் உதயகாலத்திலே அலர்ந்த தாமரைப்பூ வாதல் செங்கழுநீர்ப்பூவாதல் எட்டிதழடுக்கி, அந்த அடுக்கிலே ஊசியைத் தெறித்தால் ஓரிதழிலே தாக்குகின்ற காலம் கணம். கணமாவது, ஆதித்திய கிரணமென்றும் பஞ்சுத்தூளென்றும், நெய்மணலென்றும், மயிர்நுனி யென்றுஞ் சொல்லப்படும்; எ-று.

காட்டுகண மெட்டிலவங் காட்டை யிலவமெட்டுத்
தீட்டுமெட்டுக் காட்டை சேர்நிமிடம்—நாட்டுபுவி
யேற்ற கிரிகையிதற் கெட்டா திமயவர்முன்
றேற்றிவரு நான்குந் தொகுத்து.

என்பது, கணம் எட்டுக்கொண்டது இலவம், இலவம் எட்டுக்கொண்டது காட்டை; காட்டை எட்டுக்கொண்டது நிமிடம்; இந்த அருவம் நான்கும் பூமியின்கண் உள்ளோர்க்கு கிரிகைகளினால் காணப்படா, இந்திர சபையிலே காணப்படும்; எ-று.

வாராய் நிமிடம் வகையெட்டும் வந்தேறிச்
சோராது தோன்றிற் றுடியாகும்—பேரா
திரண்டு துடியா லெழுந்துரிதம் பின்னை
யிரண்டு துரிதம் லகு.

(தொடரும்)

எல். உலகநாத பிள்ளை.

இசை

ஓடுங் கொடிய விடப்பாம்பும்
பேயுமிசைகேட் டுள்ளுருகி
யாடுங் கருங்கல் லசைந்துவரும்
அழுத குழவி குரலடங்கும்
மாடு மிசைகேட் டுழுதுவரும்
வந்த பசுவும் பால்சுரக்கும்
பாடு மிசைகேட் டுருகாரை
என்னென் றுரைப்பேன் பாவலரே.

தன்னுளே இசையி லாதான்
றனியொலி யியையி னாறுங்
கன்னலுண் டுருகான் வஞ்சங்
கடுஞ்சதி கேடு செய்யப்
பின்னிடான் பிறர்க்கி ரங்காப்
பீடறு நெஞ்ச னுவான்
கொன்னர கிருளே வாய்ந்த
குணத்தினன் நம்பொ ணுதே.

இவற்றில் பிந்திய செய்யுள் ஆங்கில மகாகவியாகிய (Shakespeare) ஷேக்ஸ்பியருடைய வாக்கியத்தின் மொழி பெயர்ப்பாம். தன்னிடத்திலே சங்கீதம் குடிகொள்ளவோ, தான் இனிமையான கானத்தைக் கேட்டு மனமுருகவோ மாட்டாத ஒருவன், வஞ்சனையும் கொடுஞ்சதியும், துரோகமும் செய்யக் கூசமாட்டானென்றும், அவன் நரகம்போலிருண்டதும், இரக்கம், அன்பு முதலிய நற்குணங்கள் சற்றேனும் பற்றாததுமான உள்ளத்தோடு கூடியவனென்றும், அவன் ஒருவாற்றானும் நம்பத்தகாதவனென்றும் ஷேக்ஸ்பியர் இதனால் தெரிவித்திருக்கிறார். உலக அநுபவத்தை ஆராய்ந்து பார்க்கையில், இதுமுற்றிலும் உண்மையென்றே வெளியாகின்றது. மாறாக, சங்கீதவித்தையை ஒருவனுக்குப் புகட்டுவித்தால் அவன் எவ்வளவு கடிய நெஞ்சுடையவனாயினும், அது அவனிடம் இரக்கம், அன்பு

முதலிய நற்குணங்களை யுண்டாக்கி நல்வழிக்குத் திருப்பும் என்பதும் பலர் அநுபவத்தில் எட்டியிருக்கும் உண்மையே. 'ஸ்காட்லண்டு' என்னும் நாட்டில் குற்றவாளிகள் அதிகரிக்காமலிருக்குமாறு அந்நாட்டுத் துரைத்தனத்தார் ஜனங்களிடையில் சங்கீத வித்வான்களைக்கொண்டு இலவசமாகப் பாடுவிக்கச் செய்துவருவதாக அறிகிறோம். அதனால், சங்கீதம் குற்றமியற்றுவோருடைய நெஞ்சத்திற் புகுந்து குற்றம் பிறக்கக் கூடிய ஆதார நிலைகளை வேருடன் அறுத்துவிடுவதற்கு உபயோகப்படும் என்ற நம்பிக்கை அத்துரைத்தனத்தாருக்கே இருப்பதாக வெளியாகிறதல்லவா? சங்கீதத்தா லுண்டாகும் நற்பயன்களுக்கு இதை விட உறுதியான ஓர் அத்தாட்சியும் வேண்டுமா? மேலும் எலி, பல்லி, பாம்பு, குதிரை, பசு முதலான கீழ் ஜீவராசிகளே சங்கீதத்தில் மனம் லயிக்குமென்று பல வழியாய் நாம் அறிந்திருக்கிறோம். பக்திக்குச் சங்கீதம் ஓர் இன்றியமையாத் துணைக்கருவி என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள். அதனாலேயே கோயில்களிலும், கலியாண முதலிய சடங்குகளிலும் வாத்தியகோஷம் வேண்டுமென்றும், தேவாரம் முதலிய பக்திநூல்கள் சங்கீதத்துடன் ஓதப்படல் வேண்டுமென்றும், ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. உலகத்தில் எவ்விதத்திலாவது மனத்தை உருகச் செய்ய வேண்டுமானால், அதற்குச் சங்கீதம் துணையாய் நிற்கும். தென்னிந்தியாவில் பேரிசைப்புலவராய் விளங்குகின்ற ஸ்ரீதியாகராஜையர் தம் கீர்த்தனைகளில் சங்கீதத்தின் மகத்துவத்தையும் பெரும் பயன்களையும் பற்றி அங்கங்கே எடுத்துக் கூறுகின்றார். சங்கீதத்தின் பெரும்பயன் பக்திக்குத் துணை நிற்றல் என்னும் பேருண்மையை அவர்தம் கீர்த்தனைகளாலேயே உலகத்துக்குத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டியிருக்கிறார். சங்கீதத்திலுள்ள ஏழு சுரங்களும் மோக்ஷநிலையைக் குறிக்கின்றன வென்றும், சங்கீதஞானமே சாரூப்பியத்துக்கு வழி காட்டுமென்றும் அவர் சொல்லுகிறார்.

சங்கீதம் என்பது நுட்பக்கலைகளில் ஒன்று. நுட்பக்கலைகளாவன: ஓவியம் (சித்திரமெழுதல்), சிற்பம் (சிலை இயற்றல்),

பாவன்மை (கவித்துவம்), நாவன்மை (வாசாலகம்), கூத்து (நாடகம்) முதலியன. இவைகளைக் கையாடுவதற்கு வேண்டிய மதிநுட்பம் உலகத்துக் குபயோகமான மற்றக் கலைகளுக்கு வேண்டியதிலும் அதி நுட்பமாயிருக்க வேண்டும். மற்றக்கலைகளும் உலகத்துக்கு உபயோக முள்ளன வாயினும், இவ்வளவு நொய்மையும், நேர்த்தியும், இழைப்பும், பணிக்கும் வேண்டுவனவல்ல. எல்லாரும் இக்கலைகளில் வல்லாராதல் அரிது. ஹெர்பர்ட் ஸ்பென்ஸரென்னும் மேனாட்டுத் தத்துவபண்டிதர் நுட்பக்கலைகளிலெல்லாம் அதிநுட்பமானது சங்கீதமென்று அபிப்பிராயப் படுகிறார். சங்கீதக்கலை உடனுணர்ச்சியை (இரக்கத்தை) எழுப்புவதற்கு ஏற்ற கலையென்றும், அது உள்ளுணர்ச்சி விகற்பங்களின் (Emotions) இயற்கையான பாஷையென்றும் அவர் கூறுகின்றார். சங்கீதம் கேட்கும்போது உலகவியாபாரத்தில் உண்டாகிற துன்பம், கவலை இவைகளைத் தற்காலம் மறந்துவிட்டு, ஓர் ஆனந்த நிலையை அடைகிறோம் என்பது எவ்வெவர் அநுபவத்திற்கும் ஒத்துவரும் ஓர் உண்மையே. சங்கிதம் பிறர்பால் உடனுணர்ச்சியை எழுப்புவதால் கேடு சூழ்தல், வஞ்சனை செய்தல் முதலாகிய துர்க்குணங்களை நீக்கி 'மனத்துக்கண் மாசிலனாதல்' லுக்கு உத்தமமான ஒரு கருவி யென்பது சிந்திப்போருக்கெல்லாம் தெள்ளிதிற் றெளிவதே. கேட்போர்கள் ஒருவரையொருவர் அறியாத பலவேறு பாஷைகள் பேசுவோராயினும், அவர்கள் எல்லோருக்கும் ஒரே விதமான உணர்ச்சியை எழுப்பக் கூடியது சங்கீதம். அது அறிவாளியையும் அறிவிலியையும், வலியாரையும் எளியாரையும், ஒன்றுபோல உருக்குவது. அதன் உணர்ச்சிகளை ஏற்பதற்குக் கல்விப் பயிற்சி வேண்டாம்; காட்சிமுதலிய புலனுணர்ச்சியும் வேண்டாம். அஃது அன்பினைப் பெருக்கி, வன்பினைக் கரைப்பதாம். நெஞ்சத்தில் புன்மையை அறுத்து நன்மையை நிறுத்துவதாம். சங்கீதம் பரமானந்த வாரியிலுதித்தெழுந்து உலகிலுள்ளோருக்குப் பகலிரவிகந்த பரமநிலை தொனித்துத் தெவிட்டாத இன்பம் பொழிகின்ற ஓர் மழைமேகமாம். மனிதர் சிற்றறிவால் அளக்கவும் அணைகட்டவும் முடியாத பரம னருள்வெள்ளந்தானே ஊற்றெடுத்துப் பெருகியவாறு,

உடல்சிலிர்க்க, நமதுள்ளத்தே பொங்கித் ததும்பி நிறைகின்ற உணர்ச்சி யானந்த இயற்கைச் சுனையாகும்.

மேனாட்டுத் தத்துவஞானிகளின் அபிப்பிராயப்படி, மனிதரிடையில் உலக வாழ்க்கையின் தலைநோக்கம் இன்ப நுகர்ச்சியாம். அது இவ்வுலகத்தே இன்பம் நாம் அநுபவித்தலும் மறு உலகத்தில் உண்டாகக் கூடிய பேரின்பத்துக்கு அடிஸ்தானம் போடுதலுமாக நாம் வைத்துக்கொண்டால், இவ்வுலகவின்பங்களில் பிறருக்கு உபத்திரவம் விளையாததும், விசேஷப் பணச்செலவு வேண்டாததும், மற்றின்பத்திற்கும் இசைந்த துணைக்கருவியாக நிற்பதுமாகிய ஒரு கலாவித்தை சங்கீதத்தைப் போல் வேறில்லையென்று தீர்மானமாகச் சொல்லலாம். இன்னும் அதன் சிறந்த பயனைக் குறித்துச் சிந்தித்தால், சங்கீதம் அழகிய உள்ளுணர்ச்சிகளை விளக்கிக் காட்டி, அழகிய விசாரங்களை எழுப்பி அழகிய நடைகளுக்கும் செயல்களுக்கும் பிறப்பிடமாக விளங்குகின்றது. இப்படியாக "அழகலாதன செயேல்", என்ற பெரியோர் வாக்கியத்திற் கிசைந்து நடக்கவும் சங்கீதம் உதவுகின்றது.

மேலும், சங்கீதத்தில் நேரம் போக்குவதால், அது அத்தனை நேரமும் துஷ்டத்தனத்திலும், வீண் பொழுது போக்கிலும் பிறன் பழி கூறுவதிலும், மனத்தைச் செல்லவொட்டமற்றடுத்து, பாடுவோருக்கும் கேட்போருக்கும் ஒப்பற்ற ஆனந்தத்தை விளைப்பதும் உணரக்கிடக்கின்றது. சங்கீதத்தில் தேர்ச்சியடைவதற்கு இயற்கை ஞானம் வேண்டுமாயினும், அந்த ஞானம் யாரிடத்தில் வாய்ந்திருக்கு மென்றறியவே சற்றுச் சங்கீதப் பயிற்சி வேண்டியிருப்பதாலும், இளமையில் சங்கீதப் பழக்கம் சற்றேனும் இருந்தாலொழிய அதனுடைய திட்பநுட்பங்களைப் பிற்காலம் உணர்ந்தநுபவித்தல் அரிதாதலாலும், எல்லாச் சிறுவர் சிறுமிகளுக்கும் சங்கீதத்தில் ஆரம்பப் பயிற்சியாவது கொடுத்தல், அவர்கள் சுகவாழ்வுக்கு அகத்தியமென்பது சொல்லாமலே அமையும். (தொடரும்)

தி. லட்சுமணப் பிள்ளை.

குறிப்புக்கள்

திருக்கோயிற் சீர்திருத்தம்

திருநெல்வேலி ஸ்ரீ நிலைத்தேர்த்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருக்கோயில்

இத்திருக்கோயிற் பக்கத்தே, முன்னொருகாலத்திலே, இவ்வூர் ஸ்ரீ நெல்லையப்பர் கோயில் நிலைத்தேர் ஒன்று நின்றமையாலும், இத்திருக்கோயிலிலே சைவசமய குரவர் நால்வருள் ஒருவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் உருவத்திருமேனி கொண்டெழுந்தருளி யிருத்தலினாலும் இஃது இப்பெயரால் வழங்கப் பெறுகின்றது. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார், தமது திருக்கூட்டத்தோடு இத்திருநெல்வேலிக்கு எழுந்தருளியகாலத்து இத்திருக்கோயிலிலே தங்கியருளினாரென்பது ஐதிகம். இத்திருக்கோயில், இந்த ஜில்லா சிவதேவஸ்தான கமிட்டியாராளுகைக்கும், ஸ்ரீ நெல்லையப்பர் கோயிற்றருமகர்த்தர்கள் பாரமரிசத்திற்கும் உட்பட்டது. இத்திருக்கோயில், ஸ்ரீ சந்திரபுட்கரணி என்னும் சிவதீர்த்த (தெப்பக்குள)த்திற்கும் ஸ்ரீ சுவாமி சந்நிதித் தெருவின் கிழற்றத்திற்கும் இடையே, கீழைப்புதுத் தெருவிற்கு எதிர்முகமாக அமைந்திருக்கின்றது. இவ்வமைதி, குருதரிசனமே சிவதரிசனத்திற்கு அதிமுக்கிய காரணமாதலை விளக்கி,

> மூர்த்திதலம் தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்னும் ஸ்ரீ தாயுமான சுவாமிகள் திருவாக்கை எமது ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றது. இதனால், இத்திருக்கோயிலின் இன்றியமையாமை இனிது துணியப்படும்; மேலும் குறித்த சிவதீர்த்தத்தே ஸ்ரீநெல்லையப்பர், ஸ்ரீ காந்திமதி தேவியாரோடு எழுந்தருளித் தெப்பஉற்சவம் கொண்டருளும்போது, இத்திருக்கோயிற்கும் எழுந்தருளிப் பக்த ஜனங்கட்குக் காட்சிகொடுத்தருளும் வழக்கமும் வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது; அதன்பொருட்டேபோலும், இத்திருக்கோயிற்குத் தென்புறமாக ஒரு பெருந்திருவாயில் திறக்கப்பட்டிருக்கின்றது.

இப் பெருந்திருவாயில், இத்திருக்கோயிலின் அபிமுகத்திருவாயிலை மறைத்து வாடகையின் பொருட்டுக் கோயிலதிகாரிகளால் விடப்பட்டிருக்குஞ் சில்லறைக் கடைகளிருக்குமிடத்தில் வகுக்கப்

படின், அவ்வபிமுகத் திருவாயில் ஆள்வழக்கற்று அடைபடா திருத்தலோடு, குறித்த உற்சவகாலத்தே, இத்திருவாயிற்கு நேராக அமையக்கிடக்கும் மேளைப்புதுத் தெருவின் தெற்கற்றம் வரையும், யாதோரிடைஞ்சலுமின்றி எண்ணிறந்த பக்தஜனங்கள் நின்று, சிவதரிசனஞ் செய்து உய்தி கூடுதற்கு ஏதுவாம். அங்ஙனம் வகுக்குங்கால், ஸ்ரீநெல்லையப்பர், ஸ்ரீகாந்திமதி தேவி யாரோடுஎழுந்தருளியிருத்தற் கேற்றதோர் பெருந்திருப்பீடமும் அங்கே வகுக்கப்படுதல் வேண்டும். குறித்த அபிமுகத்திருவாயி யிலே மறைத்து நீச சாதியாரும் வேறுபிறரும் வழங்கி இத்திருக் கோயிற் சூழலை அசுசிப் படுத்தற்கிடனாய் வாடகைக்கு விடப் பட்டிருக்கும் அக்கடைகள் இப்பொழுதே ஒரு சிறிதுந் தாழ்க் காது அப்புறப்படுத் தொழிக்கப்படுதல் வேண்டும். அம்மட்டோ! குறித்த திருக்கோயிற் சூழலிற் சிலபாகம் அயலவரால் அபகரிக் கப்பட்டிருப்பதாகவும் தோற்றுகின்றது. அதனையும் குறித்த கோயிலதிகாரிகள் கவனித்திடுதல் வேண்டும்.

இவற்றிற் கெல்லாம் இயைய இத்திருக்கோயில், சிறப்பு வகையாற், குறித்த கோயிலதிகாரிகளால் முழுவதும் ஜீரணோத் தாரணம் செய்யப்படின் மிகவும் சிறப்பெய்தும்.

இஃது இவ்வாறிருக்க குறித்த திருக்கோவிலில், நித்திய பூசை நாடோறும் நடக்காமலிருப்பதோடு ஷை கோவிலுக்குள், தச்சன் பட்டரை வைத்து வண்டிவேலை நடந்துவருகிறது. அதில் திரு விளக்கேற்றுவதும் கிடையாது. இதைப்பற்றித் தருமகர்த்தர்க ளிடமும், கோவில் மானேஜரவர்களிடமும் சில நண்பர் தெரிவித் தும் பயனில்லை. இனியாவது தருமகர்த்தர்கள் உடனே கவ னித்து அவர்கள் கடமையைச் சரிவர நடத்துவார்களாக; சிவ கமிட்டி மெம்பர்களும் இச்சிவபுண்ணியத்தில் கவனஞ் செலுத்து வார்களாக.

வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கம், திருநெல்வேலி.

இச்சங்கம் பரம்பரைச் சைவவேளாளராகிய தொண்டை மண்டல முதலியார், கார்காத்தார், பிள்ளைமார், செட்டிப்பிள்ளை மார் இவ்வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு 20-4-1914இல் ஸ்தாபிக்கப்பட்டு நாளுக்கு நாள் மிகவிருத்தியாய் நடைபெற்று வருகிறது. இச் சங்கத்திற்கு வருடந்தோறும் சந்தாவும் நன்கொடையுமாக

ரூ 2000க்குமேல் வசூலாகிறது. அதில் 1060க்குமேல் 1500 வரை 7வது வகுப்புமுதல் பீ.எ., வகுப்புவரை மாணவர்கட்குக் கடனாகவும், எளிமையை நோக்கி இனாமாகவும் உதவிபுரிந்து வருகிறார்கள். இச்சங்க உதவியால் மாணவர்கள் பலர் உயர்ந்த கல்வியைப் பெற்று உயர்ந்த பதவிகளில் அமர்ந்து முன்மாதிரி காட்டிவருகிறார்கள். இதேபோல் எல்லா ஜில்லாக்களிலுமுள்ள வர்களும் இத்தகைய சங்கங்கள் கூட்டிப் பொருளுதவி புரிந்து வந்தால் நம்மவர்கள் அறிவின் மிக்கவர்களாய்த் துலங்குவார்க ளென்பதற்கு ஐயமுண்டோ! நமரங்காள், இப்போதே செய்ய முந்துமின்கள். 'ஊரார் பிள்ளையை யூட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானேவளரும்' என்ற பழமொழியை நினைவிலிருத்திப்பொறாமை யாதிய தீய குணங்களை விலகச்செய்து ஒற்றுமையுற்று வாழுதலே நம் ஆண்டவன் விருப்பத்திற் கிணங்கியதா யமையும். வட ஆர்க் காடு வேளாளர் கல்வி அபிவிருத்தி சங்கமும் இத்தகைய நல்ல வேலைகள் செய்து கொண்டிருப்பதாகத் 'திராவிடன்' பத்திரிகை மூலமாய்த் தெரிந்து மிக மகிழ்வுற்றோம்.

காலஞ்சென்ற திருவாளர் B. S. இரத்தினவேலு முதலியார் அவர்கள், B.A., L.T.

செந்தமிழ்ப் புலமையோடு ஆங்கிலப் புலமையும் பெற்றுக் குண வொழுக்கங்களாற் சிறந்து விளங்கிய திருவாளர் இரத்தின வேலு முதலியார் அவர்கள் இத்துணை இளம்பருவத்தே சிவபெரு மான் திருவடி நீழலடைந்தமை கேட்டுத் தமிழ்ப் புலவரும் தமிழரும் பிறரும் பெரிதும் மனம் வருந்துகின்றனர். அவர் வேலூரிலே தொண்டைமண்டலம் துளுவ வேளாள குலத்தே உதித்துக் கல்விகற்றுப் பின்னர்ச் சென்னைக் கிறித்தவ கலாசாலை யில் கற்று பீ.எ., தேர்ச்சியில் சிறப்புடன் தேறினர். அவர் மாணவராக இருந்தபொழுதே அடக்கம், இன்சொல், பொறுமை முதலிய அருங்குண மாட்சிடையவராய் ஆசிரியன்மார் அனைவரு டைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்றுச் சிறந்தார். செந் தமிழ்ச்சுவை இயற்கையிலேயேயுடைய நம்நண்பர் அக்காலத்தே அக் கல்லூரியில் தமிழாசிரியராக விளங்கிய கல்விக் கடலாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமி வேதாசலம் அவர்களை அணுகிப் பலநூற்பொருள் களையும் ஐயந் திரிபறக் கேட்டுத் தெளிந்தார். அன்றியும் சைவ சமயத்திலே அவருக்கு இருந்த பற்று மிகுதியினாலும் உலக நிலை யாமையை அடிக்கடி நினைந்து வருந்தும் நீர்மையராதலினாலும் அவருக்குத் தத்துவசாத்திர சூழ்ச்சி மிகவும் விருப்பமாக

இருந்தது. அதனால் பல தத்துவமுறைகளையும் பசித்தவன் புசிப்பதுபோல ஆர்வமுடன் படித்தறிந்து அவற்றின்மேல் தம் மனஞ் செல்லாராய்ச் சைவசித்தாந்த சாத்திரங்களைத் துறை போகக் கற்று அவற்றின் உண்மைகளே பேருண்மைகள் எனத் தெளிந்து அவ்வாறு ஒழுகுவாராயினர். கல்லூரியை விட்டகன்ற பின்னர்த் தாய் உடன்பிறப்பினர் ஆகிய இவர்தம் சொல்வழி மணம்புரிந்து கொள்ள இசையாது மறுத்துவிட்டனர். பின்னர்ச் சின்னாள் ரெவினியூ இன்ஸ்பெக்டர் (Revenue Inspector) ஆக விருந்து அவ்வேலையில் நல்லபெயர் வாங்கினார். பின்பு திருநெல் வேலி, இந்து கலாசாலையிலும், பிற பாடசாலைகளிலும் ஆசிரிய ராக இருந்தார். அவர் கற்பிக்குந் திறனையும் ஒழுக்கத்தையும் எல்லாரும் வியந்து கூறுவர். வடநாடு முழுவதும் சென்று ஆங் குள்ள மேதாவிகளாகிய காந்தியடிகள், இரவீந்திரநாத தாகூர் முதலியோரைக் கண்டு நேரில் உரையாடியும் காசி, பிரயாகை முதலிய திருப்பதிகளைத் தரிசித்தும் கங்கை, யமுனை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் ஆடியும் வேலூருக்குத் திரும்பினர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய 'கார் நாற்பது' என்னும் நூலுக்கு விரிந்த அணியுரையொன்று புலவர் போற்று மாறு எழுதியுள்ளார். அந்நூலிலே அவர் செய்துள்ள ஆராய்ச்சி யும் எழுதியுள்ள முகவுரையும் தமிழ் மொழிக்கு மிக இன்றியமை யாதன. இன்னும் வெளிவராத பல ஆராய்ச்சியுரைகள் அவ ரிடத்திலே யிருந்தன. 'குடம்பை என்னுஞ் சொல்லுக் கிட்ட வைசக்குப்பாயம்', 'தமிழ்ச் சங்க வரலாறு' முதலியன அவற்றுள் சில. அவர் நுண்ணிய மதித்திறனும் ஆழ்ந்த எண்ணமும் உடை யவர்; அடக்கத்துக்கோர் ஆபரணம் ஒத்தவர். உண்மைத் துறவி. புகழும் வேண்டாதவர் என்பது அவர் எழுதிய கார் நாற்பது உரையைச் சிவபாதத்துக்கு அடிபுறையாக்கியதே சான்றாம். அவர் உள்ளம் இறைவனிடத்தே பதிந்திருந்தது; எப்பொழுதும் சிந்தையிலேயே ஆழ்ந்திருப்பார். அத்தகைய தன்னலங் கருதாத பெருந்தவச் செல்வர் இன்னுஞ் சின்னாள் இவ்வுலகத்தே வாழ்ந்திருப்பாராயின் தமிழ்நாடும் சைவப் பெரு நாடும் நிரம்பப் பயன்பெறும் என்பதற்குத் தடையில்லை. அவர் திடுமென விண்ணுலகடைந்ததைக் கேட்டு வருந்திய உறவினர் நண்பர்கிலை பெரிதும் வருந்தற்பாலது. அவர் ஆவி பேரின்பக் கடலில் படிவதாக. தமிழகம் அவருக்குச்செய்கடன் செய்வதாக.

Printed at the Sivakami Vilasam press & Published by V. Subbiah for the S. I. S. S. W. P. Society Ltd., 306, Linga Chetty St. Madras.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
306, லிங்கச்செட்டித்தெரு, சென்னை.

புத்தக விளம்பரம்

பிரஹ்மஸ்ரீ மஹாமஹோபாத்தியாய
உ. வே. சாமிநாதய்யர் அவர்கள்
பரிசோதித்துப் பதிப்பித்துள்ள
தமிழ்ப் புத்தகங்கள் (பழைய காப்பியங்கள்)

	ரூ.	அ.
சீவகசிந்தாமணி நச்சினார்க்கினியருரை பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன் (மூன்றாம் பதிப்பு) ...	10	0
சிலப்பதிகாரம் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரை முதலியனவும் (இரண்டாம் பதிப்பு) ...	8	12
மணிமேகலை அரும்பதவுரை முதலியனவும் (இரண்டாம் பதிப்பு)	6	4
பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியருரை முதலியனவும் பலவகை ஆராய்ச்சிக்குறிப்புக்களுடன் ...	5	0
மணிமேகலைக் கதைச்சுருக்கம் (வசனம்)	0	8
புத்த சரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம் (வசனம்)	0	8

(எட்டுத்தொகையைச் சார்ந்தவை)

ஐங்குறுநூறு மூலமும் உரை முதலியனவும் இரண்டாம் பதிப்பு...	2	0
பதிற்றுப்பத்து மூலமும் உரையும் ,, ...	1	14
பரிபாடல் மூலமும் பரிமேலழக ருரையும்	2	8
புறநானூறு மூலமும் உரை முதலியனவும்	5	10
,, (1—50) செய்யுள் உரையுடன் ...	0	8
,, (51—100) ,, ,, ...	0	12
,, (101—150) ,, ,, ...	0	8
,, (151—200) ,, ,, ...	0	12
,, (201—225) ,, ,, ...	0	8
,, (200—266) ,, ,, ...	0	12

(இலக்கணம்)

புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரை முதலியனவும் ...	1	14
நன்னூல் மூலமும் மயிலைநாதருரையும்	3	2

(சைவ நூல்கள்)

பெரும்பற்றப் புலியூர்நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் அல்லது வேம்பத்தூரார் திருவிளையாடல் அரும்பதவுரை முதலியவற்றுடன்	2	8

தொல்காப்பியத்தேவரியற்றிய திருப்பாதிரிப்புலியூர்க்கலம்பகம்	0	4
சேறைக்கவிராசபிள்ளை இயற்றிய திருக்காளத்திநாதருலா அரும்பதவுரை முதலியவற்றுடன்	0	6
திருப்பூவணம் கந்தசாமிப்புலவர் இயற்றிய திருப்பூவணநாத ருலா அரும்பதவுரை முதலியவற்றுடன்	0	4
திருவாவடு துறையாதினத்து ஸ்ரீகச்சியப்ப முனிவரியற்றிய வண்டுவிடுதூது	0	2
தொட்டிக்கலைச் சுப்பிரமணிய முனிவர் இயற்றிய திருவாவடு துறைக்கோவை அரும்பதவுரை முதலியவற்றுடன் ...	0	8

மஹாவித்துவான் ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றியவை:—

திருப்பெருந்துறைப்புராணம் அரும்பதவுரை முதலியவற்றுடன்	1	4
திருவாரூர்த்தியாகராசலீலை ,, ,, ...	0	12
சூரைமாநகர்ப்புராணம் ,, ,, ...	0	8
மண்ணிப்படிக்கரைப்புராணம் ,, ,, ...	0	8
தனியூர்ப்புராணம் ,, ,, ...	0	2

ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார் முதலியோர் பதித்த

வைஷ்ணவ நூல்கள்.

நாலாயிரத் திவ்விய பிரபந்தம்	தென்கலை சம்பிரதாயம்	4	0
Do	வடகலை சம்பிரதாயம்	4	0
முதலாயிரம்	திருப்பல்லாண்டு	1	2
பெரிய திருமொழி	திருமங்கையாழ்வார் அருளியது	1	2
இயற்பா	1, 2, 3, திருவந்தாதி	0	14
திருவாய்மொழி	நம்மாழ்வார் அருளியது	1	0
நித்யாநு சந்தானம்	தென்கலை சம்பிரதாயம்	0	12
Do	வடகலை சம்பிரதாயம்	0	12
Do வடகலை	பிரதிபத தாத்பர்யம்	1	10
அஷ்டாதசரகஸ்யம்	மூலமும் டிப்பிணியும்	2	0
த்வாதசரஹஸ்யம்		0	12
திருப்பாவை மூலம்	வியாக்யானத்துடன்	2	0
பெரியாழ்வார்மொழி	பதவுரை, விரிவுரையுடன்	1	8
உபதேசரத்னமாலை	பிள்ளைலோகம் ஜீயர் வியாக்யானம்	0	10
ஆசார்யஹ்ருதயம்	மணவாளமாமுனிகள் வியாக்யானம்	2	8
முகுந்தமாலை	வியாக்யானத்துடன்	0	5
க்ருஷ்ணகர்ணாமிருதம்	விரிவான தமிழுரையுடன்	1	4
அஷ்டப்பிரபந்தம்	மூலம் மட்டும்	0	12
Do	மூலமும் உரையும்	3	0
ஸ்ரீவசனபூஷணம்	மணவாளமாமுனிகள் வ்யாக்யானம்	2	4
தசாவதாரப்பிரபாவம்	தமிழ்வசன நடை	1	0
ஆளவந்தார் ஸ்தோத்திரம்	பிரதிபததாத்பர்யம்	0	6
ஆழ்வார்கள் சரித்திரம்	தமிழ்வசனம்	0	12

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இயற்றியவை

தமிழ்மொழி வரலாறு	1	0	பாவலர் விருந்து	0	8
மதிவாணன்	0	10	ஷை காலிகோ கட்டடம்	1	0
ரூபாவதி—சிறந்த நாடகம்	1	0	மானவிஜயம்	0	8
மணியசிவனார் சரித்திரம்	0	4	ஷை காலிகோகட்டடம்	1	0
தனிப்பாசுரத்தொகை	0	8	தமிழ் வியாசங்கள்	0	4

ஆறுமுக நாவலர் பதிப்புப் புத்தகங்கள்.

கந்தபுராணம் மூலம் 2 பாகம்	6	8
கந்தபுராணவசனம்	4	0
திருக்குறள் பரிமேலழகருரையுடன்	4	0
திருக்குறள் மூலம்	0	6
பெரியபுராணம் சூசனத்தோடு	4	0
வில்லிபுத்தூரர் பாரதம்	3	8
சேதுபுராணம்	3	0
திருக்கோவையாருரை	2	0
சிவஞான போதம் சிவஞான முனிவர் சிற்றுரையுடன்	1	0
இராமாயணம், பாலகாண்டம் அரும்பதவுரையுடன்	2	0
நன்னூற்காண்டிகையுரை	1	12
நன்னூல்விருத்தியுரை	1	12
அருட்பா—இது அகத்தியர் தேவாரத்திரட்டும் திருவாசகமும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பெரியபுராணச்செய்யுட்டிரட்டும் அடங்கியது	1	8
கொலைமறுத்தல், வைராக்கியசதகம் வைராக்கியதீபம் அவிரோதவுந்தியார்	1	8
சூடாமணி நிகண்டுரை முதலிரண்டுதொகுதிச் சொற்பொருளுடன் 12-தொகுதியும்	1	8
பெரிய புராண வசனம்	1	4
திருவிளையாடற்புராணவசனம்	1	4
பதினொராந்திருமுறை	1	4
கோயிற்புராணவுரை	1	4
திருவாசகம், திருக்கோவையார்	1	4
இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கண விளக்கச்சூறாவளி	1	2
சைவசமயநெறியுரை	1	2
அகப்பொருள்விளக்கவுரை	1	8
இலக்கியச்சொல்லகராதி	1	8
சூடாமணிநிகண்டு 10-தொகுதியுரை முதலிரண்டு தொகுதிப் பொருளுடன்	1	0
ஆறுமுகநாவலர் சரித்திரம்	1	0
தாயுமானசுவாமிபாடல்	1	0
பிரயோகவிவேகவுரை	0	12
இலக்கணச்சுருக்கம்	0	10
கந்தபுராணச்சுருக்கம்	0	8
சூடாமணிநிகண்டுரை 11, 12 தொகுதி	0	8
சிவஞானத்தெளிவுபதேசத்ரயம்	0	8
தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம்	0	6
அபிராமியந்தாதியுரை	0	5
அகத்தியர் தேவாரத்திரட்டு	0	4
கொலைமறுத்தல்	0	4
திருமுருகாற்றுப்படையுரை	0	4
மருதூரந்தாதியுரை	0	4
திரிகடுகவுரை	0	4
திருவகுப்பு	0	4
நீதிவெண்பாவுரை	0	3
சிவாலய தரிசனவிதி	0	2½
பட்டணத்தார் பாடல்	0	3
திருச்செந்தினிரோட்டயமகவந்தாதியுரை	0	2
உபநிடதவுரை	0	2
சிதம்பரமும்மணிக்கோவை	0	2
நன்னூல் மூலம்	0	2
சிதம்பர மான்மியம்	0	2
விவிலியகுற்சிதம்	0	2
இலக்கணவினாவிடை	0	2
கந்தரலங்காரம், கந்தரநுபூதி	0	2
நால்வர் நான்மணிமாலை	0	1½
ஏரெழுபது, திருக்கைவழக்கம்	0	1½
நீதிநெறிவிளக்கம்	0	1½
ஆத்திச்சூடி கொன்றைவேந்தனுரை	0	1½
நல்வழியுரை	0	1½
நன்னெறியுரை	0	1½
வாக்குண்டாமுரை	0	1
மறைசையந்தாதி	0	1
அருணகிரியந்தாதி	0	1
அபிராமியந்தாதி	0	1
திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி	0	1
திருக்கருவைவெண்பாவந்தாதி	0	1
சிங்கைச்சிலேடை வெண்பா	0	1
திருச்செந்தூரகவல்	0	1
புட்பவிதி	0	1
சிவதத்துவவிவேகம்	0	1
விநாயககவசம், சிவகவசம், சத்திகவசம், இலக்குமிதோத்திரம் சரசுவதிதோத்திரம்	0	1
விநாயகரகவல், திருச்செந்தூர்க்கலிவெண்பா	0	1

உவமானசங்கிரகம், இரத்தினச் சுருக்கம்	0	1
நமச்சிவாயமாலை	0	1
திருமுருகாற்றுப்படை மூலம்	0	1
மதுரை அறுபத்துநான்கு திருவிளையாடற் போற்றிக்கலிவெண்பா	0	1
கபிலரகவல்	0	½
சரஸ்வதியந்தாதி	0	½
முதற்பாலபாடம்	0	1
இரண்டாம்பாலபாடம்	0	2½
மூன்றும்பாலபாடம்	0	8
நான்காம் பாலபாடம்	0	12
முதற்சைவவினுவிடை	0	2
இரண்டாஞ்சைவவினுவிடை	0	8

யாழ்ப்பாணப் பதிப்பு நூல்கள்

அபிதான கோசம்	6	0
சூடாமணி நிகண்டு12-தொகுதி	1	4
தென்மொழி வரலாறு (ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை)	2	8
தமிழ் வரலாறு (பூபாலபிள்ளை)	3	8
தமிழ்ப்புலவர் சரித்திரம்	2	4
இரகுவம்சம் மூலம்	3	0
ஷை உரை முதற்பாகம்	2	4
நன்னூல் இலகுபோதம் (எழுத்ததிகாரம்)	1	4
ஷை சொல்லதிகாரம்	1	4
நன்னூல் உதாரண விளக்கமும், ஆகுபெயர் அன்மொழித் தொகையும்	0	5
காளிதாச சரித்திரம்	0	5
காளமேகப்புலவர் சரித்திரம்	0	5
திருவாசக மூலம் அழகிய பட்டுக் கிலிட்டுக்கட்டடம்	3	8
திருவாதவூரடிகள் புராண மூலம் அரும்பதவுரையுடன்	0	8
ஷை விருத்தியுரை	2	4
ஷை புத்துரை	1	8
தத்துவப்பிரகாசம் உரையுடன்	2	12
சிவப்பிரகாசப் புத்துரை	2	4
சைவபோதம் முதற் புத்தகம்	0	8
ஷை இரண்டாம் புத்தகம்	0	9
சைவாசௌச தீபிகை	2	0
கந்தரலங்காரம் உரையுடன்	0	6
நீதிநெறி விளக்கம் உரை	0	8
வைராக்கிய தீபம்	0	1
சங்கரபண்டிதர் சற்பிரசங்கத் திரட்டு	0	10
விநோதச் செய்யுட்டிரட்டு	0	1
நீதிமஞ்சரி மூலமும் உரையும்	0	8
சிசுபாலசரிதம் (அ. குமாரசாமிப் பிள்ளை)	0	8
இதோபதேசம்	0	8
வினைப்பகுபதவிளக்கம்	0	8
கலைசைச் சிலேடை வெண்பா	0	3
சிவத்தோத்திரக் கவித்திரட்டு	0	4
இலக்கணசந்திரிகை	0	5
மேகதூதக்காரிகை	0	5
பிரபஞ்சவிசாரம்	1	8
உரிச்சொல் நிகண்டு	0	8
ஜாதக சந்திரிகை	0	8
தருக்கசங்கிரகம் அன்னம் பட்டீயம், பதக்ருத்தியம், நியாய போதினி முதலியன	2	8

சங்கப்பதிப்பு நூல்கள்.

ஞானுமிர்த மூலமும் உரையும்	1	4
சைவமஞ்சரி	1	14
யாப்பு அணி இலக்கணங்கள்	0	10
பன்னூற்றிரட்டு	2	8
தொல்காப்பியம் செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரை	2	4
தமிழ்ச்சொல்லகராதி (உயிர்வருக்கம் முதற் பாகம்)	7	4
ஷை இரண்டாம் பாகம்	5	4
ஷை மூன்றும் பாகம்	6	0
அபிதான சிந்தாமணி	8	0
திருமந்திரம் 100-பாட்டு உரை	1	4
பழமொழி 100-பாட்டு உரை	1	4
சேரன் செங்குட்டுவன்	1	4
வஞ்சிமாநகர்	0	10
வேளிர் வரலாறு	0	10
அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ் குறிப்புரை	0	10
கலைசைச் சிலேடைவெண்பா	0	4
பன்னிருபாட்டியல்	0	5
நான்மணிக்கடிகையுரை	0	4
நரிவிருத்தம்	0	3
தேவையுலா	0	4
விக்கிரமசோழனுலா	0	3
மாறனலங்காரம் உரை	3	4
சிவஞானசுவாமிகள் இரட்டைமணிமாலை	0	2

டி. செல்வகேசவராய முதலியார் பதிப்பு

தமிழ் (தமிழ்பாஷை வரலாறு)	1	0
தமிழ் வியாசங்கள் (7-கட்டுரை)	1	0
வியாசமஞ்சரி	0	10
ஆசாரக்கோவை உரையுடன்	0	8
பழமொழி நானூறு பழைய பொழிப்புரை கருத்துரை	2	0
முதுமொழிக்காஞ்சி பழைய பொழிப்புரை கருத்துரை	0	5
அறநெறிச்சாரம் 222-வெண்பா	0	6
கம்பநாடர்-சரித்திர ஆராய்ச்சி	0	10
திருவள்ளுவர் சரித்திர ,,	0	12
கண்ணகி சரித்திரம்—சிலப்பதிகாரத்தின் சுருக்கம்	0	12
கலிங்கத்துப்பரணி—ஷை பாட்டின் கதாசங்கிரகம்	0	8
பஞ்சலட்சணம்-இலக்கண நூல்	1	0
மகாதேவ கோவிந்த ரானடே	1	0
ராபின்ஸன் குருஸோ	0	4
அபிநவக்கதைகள் (5 சிறிய கதைகள் கொண்டது)	0	10
குசேலோபாக்யானம்	0	8
அக்பர்—சரித்திரசம்பந்த கதை	0	12
குசேலர்—பாகவதபுராணகதை	0	4

செந்தில்வேல் முதலியார் பதிப்பு

I திருமுறை (1-7) ஸ்தல முறைத் தேவாரம்	6	0
II ஷை (8-11) திருவாசக முதலியன	4	0
III திருமுறை (11) பெரிய புராணம்	3	0
ஷை மூன்று வாலியங்களும் மொத்தமாய்	12	0
திருக்கோவையார் (பதவுரை)	2	0
,, திருவாசகம் மூலத்துடன்	2	4
திருமுருகாற்றுப்படை (பிரதி பதவுரை)	0	3
தேவபசுவின் படம் சிவதருமோத்திர கோபுர வியலின்படி	0	2
இராமாயண வசனச்சுருக்கம் 50-படத்துடன்	0	8
பாரதவசனச்சுருக்கம் 32-படம்	0	8

பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்

நாலடியார் உரையுடன்	2	0
ஷை வேறு பதிப்பு	1	4
நான்மணிக்கடிகையுரை	0	6
ஏலாதி யுரை	0	8
இன்னா நாற்பது உரை	0	3
இனியவை நாற்பது உரை	0	5
கார் நாற்பது உரை	0	3
ஷை விருத்தி	1	4
களவழி நாற்பது உரை	0	3
முதுமொழிக்காஞ்சியுரை	0	5
ஆசாரக்கோவை யுரை	0	8
பழமொழி நானூறு உரை	2	0
திரிகடுகம் உரை	0	4
திணைமாலை 150 உரை	0	5
திணைமொழி 50 உரை	0	5
ஐந்திணை 50 உரை	0	4
திருக்குறள் மூலம் (பாக்கெட்)	0	6
ஷை உரை (நாவலர்)	4	0
ஷை உரை (பாக்கட்)	2	8
ஷை விருத்தி 2-பாகம்	8	0
ஷை வசனம்	2	8
ஷை நாடகம் காமத்துப்பால்	1	4

செந்தமிழ் ஆராய்ச்சி நூல்கள்

தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி சென்ற 1912-ம் ஆண்டில் கொழும்பு ஸ்ரீமான் கு- ஸ்ரீகாந்த முதலியார் அவர்கள் (Litt. D.) இவ்வாராய்ச்சியைச் செவ்வனே செய்பவருக்கு ரூபா 200-பரிசு அளிப்பதாகப் பத்திரிகைகளில் பிரசுரித்தபடி ஸ்ரீமான்-மு. இராகவையங்கார் அவர்கள் எழுதிப் பரிசு பெற்றது.	1	4
சேரன் செங்குட்டுவன்	1	4
வேளிர் வரலாறு	0	10
நக்கீரர் (ஸ்ரீமான் ந. மு. வேங்கடசாமி நாட்டார்)	0	8
கபிலர் ,,	1	4
வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி	0	3
மொழிநூல் (Philology) (மாகறல்-கார்த்திகேய முதலியார்)	2	8
வஞ்சிமாநகர் (ஸ்ரீமான்-ரா. இராகவையங்கார்)	0	10

தொல்காப்பியப் பாயிர விருத்தி (அரசஞ் சண்முகனார்) 2 0
தமிழ் வரலாறு. இது (தஞ்சாவூரில் வக்கீலும் தமிழ்ப்பிரபல பெரும் புலவரும் ஆங்கில நூலாராய்ச்சி வல்லுநருமான ஸ்ரீமான். கே. எஸ். சீனிவாசபிள்ளை அவர்கள் இயற்றியது) முதற்பாகம் 0 8
மேற்படி இரண்டாம் பாகம் 1 8
இம்மாதிரி ஆராய்ச்சி நூல் இதுவரை நமது தமிழ் நாட்டில வெளிவந்த தில்லை
ஸ்ரீமத் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் கொங்கு நாடும். கோயம்புத்தூர், வக்கில் திருவாளர் சி. எம். இராமச்சந்திர செட்டியார் பி. எ., பி. எல்., 0 12
தமிழ் நாவலர் சரிதை (T. கனக சுந்தரம் பிள்ளை) 0 12
தமிழ்ப்பெருமக்கள் வரலாறு (அனவரதவிநாயகம்பிள்ளை) 1 4
தமிழ்ப்புலவர் வரலாறு 0 12
சூளாமணி வசனம் (ந. பலராமய்யர்) 1 0
சிலப்பதிகாரக்கதை ,, 1 0
பரதன் —உத்தம சகோதரன் (இராமாயணக்கதை) 0 8
ஆத்திசூடி நீதிக்கதைகள் 0 8
ஆரிய சரித்திரம், (நீதிக்கதை) 1 0
திருக்குறள் நீதிக்கதைகள் முதற்பாகம் 0 12
ஷை இரண்டாம் பாகம் 0 12
சீவகசிந்தாமணி வசனம் முதற் பாகம் 1 0
சொற்பொழிவாற்றுப்படை. (Lecturing System or the Art of Delivering) இது ஸ்ரீமான் S. பால்வண்ணமுதலியார் B.A., அவர்கள் செய்தது. இது பிரசங்கஞ் செய்யவேண்டிய முறைகளைப்பற்றி விரிவாய்க் கூறும் 0 4
திராவிடவேதத் திருமுறைத் திரட்டு, இது கயப்பாக்கம் சதாசிவச்செட்டியாரவர்கள் பன்னிரு திருமுறைகளினின்றுந் திரட்டியது 1 8

திருமுறை இலக்கியம்.

மூவர் தேவாரம் பண்முறை	5	8
தேவார வேதசாரம்	3	8
சுந்தரர் தேவாரம்	1	0
ஷை மூலமும் உரையும் படங்களுடன்	3	0
பன்னிரு திருமுறைத்திரட்டு	1	0
சாந்தோபதேச மஞ்சரி	1	4
திருவாசக மூலம் குறிப்புரை	1	0
திருவிசைப்பா, திருப்பல்லாண்டு உரை	0	12
திருவாசக மூலம் (பாக்கட்)	0	12
திருமந்திரம் மூலமும் குறிப்புரையும் சித்தாந் கட்டடம்	5	8
திருமந்திர மூலம்	2	0
பெரியபுராணம் பதவுரை குறிப்புரை படங்களுடன் 4-பாகம்	20	0
,, மூலமும் பொழிப்பும் 2-பாகம்	10	0
,, வசனம் படங்களுடன்	3	0
,, வசனச் சுருக்கம் பாக்கட்	0	12

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம்

M. நாதா தேசிக தாதாசாரியரும் கோ. க. ஸ்ரீனிவாசராகவாசாரியரும் விசேஷார்த்தங்களுடனும், படங்களுடனும் இனிய தமிழ் நடையில் மொழி பெயர்க்கப்பட்டது

பாலகாண்டம்	1	8
அயோத்தியாகாண்டம்	3	0
ஆரண்யகாண்டம்	1	8
கிஷ்கிந்தா காண்டம்	1	8
சுந்தர காண்டம் தமிழ் வசனம்	4	8
யுத்த காண்டம்	3	0
உத்தர காண்டம்	3	0
,, 7-காண்டங்கள் ஒரே தடவையில் வாங்கினால்	10	0
வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம் பண்டித நடேச சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு 6 காண்டம்	13	0

வால்மீகி ராமாயணம் தமிழ் வசனம் சரியான மொழி பெயர்ப்பு பல வ்யாக்கியானக் குறிப்புகளுடன் கூடியது.

பாலகாண்டம்	1	4
அயோத்தியாகாண்டம்	1	4
ஆரண்ய காண்டம்	1	4

கிஷ்கிந்தா காண்டம்	1	4
சுந்தரகாண்டம்	1	4
யுத்தகாண்டம் முதற்பாகம்	1	4
ஷை 2-ம் பாகம்	1	4
கம்பராமாயணம் மூலம் (இரண்டு பாகம்)	8	8
,, வசனம் (இரண்டுபாகம்)	12	8
,, பாலகாண்டம் குறிப்புரை உயர்ந்த கிளேஸ்கடிதம்	2	0
,, விருத்தியுரை	4	0
அயோத்தியாகாண்டம் உரை	3	8
,, கிஷ்கிந்தா காண்டம் உரை (சே. கி.)	4	8
,, சுந்தா காண்டம் உரை	4	0

மஹா பாரதம்.

வடமொழி வியாச பாரதத்திற்குச் சரியான தமிழ் வசனம்

ம-வீ. இராமானுஜாசாரியர் பதிப்பு

ஆதி பர்வம்	6	0
சபா பர்வம்	2	0
விராட பர்வம்	2	8
பீஷ்ம பர்வம்	4	0
துரோண பர்வம்	5	0
சாந்திபர்வம் 1-ம் பாகம்	4	0
,, 2-ம் பாகம்	4	8
அநுசாஸன பர்வம்	6	0
பாரத வசனம் (ரப்) 4-பாகம்	16	0
நல்லாப்பிள்ளை பாரத மூலம் இரண்டு பாகம்	12	0
வில்லி பாரத மூலம்	3	8
மேற்படி உத்தியோக பர்வம் உரை (சே. கி.)	2	0
,, சபா பர்வம் உரை	2	8
,, ஆதி பர்வம் உரை	4	8
,, இராயசூயச்சருக்கம் உரை	1	0
வில்லி பாரத மூலம் வாரணவதச் சருக்கம் உரை	1	0
சாந்தி பர்வம் வசனம் (பாரத சாமாச்சாரியார்)	3	8

ஸ்ரீமத்பாகவதம்

பாகவதம் (ஆரியப் புலவர்)	3	0
பாகவத வசனம் 2-பாகம்	10	0

பாகவதம்

இது கிரந்த சுலோகங்களும் தமிழ் மொழி பெயர்ப்பும் கொண்டது ஸ்ரீதரிய வியாக்கியானத்துடன் கூடியது.

முதற்பாகம் 1 முதல் 4 ஸ்கந்தங்கள்	6	0
2-வது பாகம் 5 முதல் 9 ஸ்கந்தங்கள்	6	0
3-வது பாகம் 10வது ஸ்கந்தம்	6	0
4-வது பாகம் 11, 12-வது ஸ்கந்தங்கள்	4	0

ஷை வேறு பதிப்பு தமிழ் மொழி பெயர்ப்பு பல வியாக்கியானக் குறிப்புக்களுடன்

முதற்பாகம்	1	0
2-ம் ஷை	1	0
3-ம் ,,	1	4
4-ம் ,,	1	4
5-ம் ,,	2	12
6-ம் ,,	1	0

அரிய புராணங்கள்

திருக்குற்றாலத்தல புராணம்	3	0
திருச்செந்தூர்த் தலபுராண வசனம்	0	12
அருணாசல புராணம்	3	0
பழனித்தல புராணம்	3	0
காஞ்சிப்புராணம்	3	0
விநாயக புராணம் மூலம்	3	0
விநாயக புராணம் உரை	2	8
விநாயக புராணம் வசனம்	4	0
மச்ச புராணம்	3	4
சேது புராணம்	2	8
,, வசனம்	2	0
விருத்தாசலப் புராணம்	1	0
வீரநாராயண விஜயம் உரை	1	8
சிவதரு மோத்தரம் இதில் ஆகமப் பொருள்களெல்லாம் பார்க்கக் காணலாம்.	3	0
சிகாளத்தி புராணம் மூலமும் உரையும்	2	8
சிவராத்திரி புராணம்	1	8
புலவர்புராணம்	2	0
அரிச்சந்திர புராணம்	2	0
உபதேசகாண்டம் உரையுடன்	5	8
சுப்பிரமணியர் பராக்கிரமம்	2	8
பட்டணத்தார் புராணம் பொழிப்புரை	2	0

அகராதி.

தமிழ்ச்சொல்லகராதி: உதாரணங்களுடன் 3 பாகம்	18	0
தமிழ்மொழி அகராதி The Coronation Tamil Dictionary	10	0
அபிதானகோசம் (தேவர், ரிஷிகள், புலவர், அரசர் முதலியோர் சரித்திர அகராதி	5	8
தமிழ்ச் சிறப்புப் பெயரகராதி (ஷை சரித்திர அகராதி)	3	0
தமிழ் இங்கிலீஷ் கிளாசிக லகராதி	2	0
தமிழ்-தமிழ் இங்கிலீஷ் (விஸ்வநாத பிள்ளை, புதிய பதிப்பு	6	0
போப்ஸ் தமிழ் இங்கிலீஷ் அகராதி (தமிழ் கற்கும் ஐரோப்பியரின் உபயோகத்துக்காக எழுதப்பட்டு சுமார் 100-பக்க முன்னது)	5	0
ஷை யார் இங்கிலீஷ் தமிழ் அகராதி	5	0
English English Dictionary இங்கிலீஷ் இங்கிலீஷ் அகராதி (Oxford)	6	2
இங்கிலீஷ் தமிழ் அகராதி (சங்கர நாராயண சாஸ்திரி) கடுத்தரம்	2	8
ஷை (பாக்கெட்)	1	4
ஷை யார் இங்கிலீஷ் தெலுங்கு	3	8
ஷை பாக்கெட்அளவு	2	0
ஷை பெர்ஸிவல் அகராதி	3	8
தமிழ் தமிழ் மாணவரகராதி	2	8

பிரமஹ்மானந்த ஸ்வாமிகள் இயற்றிய நூல்கள் (வேதாந்தம்)

ஸ்ரீ பஞ்சதசி பஞ்சதச பிரகரணம் 2-வால்யம்	11	0
ஹடயோக பிரதீபிகை	2	4
விசார சந்திரோதயம்	1	12
ஸ்ரீசிவஞான போதம் தத்துவப் பிரகாசிகை உரையுடன்	1	12
ஸ்ரீநந்திகேசுவர ப்ரகாசிகை	0	5
ஞானவாசிட்ட வசனம் 32000 வைராக்கிய பிரகாச வசனம்	1	8
சிவயோக பிரகாசிகை	0	12
சுருதி ஷட்லிங்க சங்கிரகம்	0	10
கைவல்யோபநிடதம் அமிர்த பந்தோப நிடதம் சுகாசியோப நிடதம் செய்யுள் ஸ்ரீசிவபஞ்சாக்ஷர வாக்கியம்	0	6
ஸ்ரீராம மந்திரார்த்தம் ஸ்ரீகணேச சோடச நாமஸ்தவம்	0	5
சிவரகசியம் 16-ம் அத்தியாயம் ஸ்ரீ ஜகத்குரு சங்கராச் சாரியர் சரித்ரம் செய்யுள்	0	4
விசார சாகரம்	3	4
விருத்திப் பிரபாகரம்	4	0
பிரஹ்மாவித சீர்பாத பத்திரி	0	3
தருக்க கௌமுதி பதார்த்தம் 16-டன் தர்க்கநூல் 2-ம்	0	12
தத்துவ மசிமஹா வாக்கிய உபதேசம் சுகரகசியம் மகா வாக்கியார்த்தத்துடன்	0	4
பாலபோதம்	1	12
நாநாஜீவவாத கட்டளை அரும் பத உரையுடன்	0	4
மேற்படி செய்யுள்	0	4
விருத்திரத்னவலி	0	14
விவேக சிந்தாமணி வேதாந்த பரிச்சேதம்	0	8
அபரோட்சானுபூதி	0	10
ஆத்மபோதம் தத்வபோதம்	0	10
பஞ்சீகரணம் (27-நூல்	1	2
உத்தர கீதை	0	8
ஸ்ரீராமகீதை	0	8
குருகீதை கலிக்கோபயிண்டு	1	8
தேவிகீதை	0	13
ஆதிசங்கராசாரியார் சரித்திரம்	0	3
சங்கர நீலகண்ட சாமியார் சம்வாதம்	0	8
பிரஹ்மநாமாவலி	0	4
கீதாசாரத் தாலாட்டு உரை	0	8

சென்னை ஆநந்தாஸ்ரமத்தில் பதிப்பித்த புஸ்தகங்கள் (வேதாந்தம்)

ஆத்மபுராணம் வசனம் 1440-பக்கம்கொண்டது	8	0
நியாயப் பிரகாசிம் தருக்கநூல்	4	0
தத்துவாறு சந்தானம் வசனம்	2	8
வேதாந்த மரகசிந்தாமணி	4	0
பகவத்கீதா கூடார்த்த தீபிகை	5	0
கைவல்யம் உரையுடன்	3	0

அரிய தமிழ்ப் புத்தகங்கள்.

காஞ்சிப் புராணம் முதற்காண்டம் உரையுடன் (2-பாகம்)	ரு.	15	0
காசிகாண்டம் உரையுடன்		10	0
சிவமகா புராணம்		12	0
திருவிளையாடல் பதவுரை 2-பாகம் முழுதும் படங்களுடன்		21	0
பராசரஸ்மிருதி அசாரகாண்டம் தமிழில்		15	0
தேம்பாவணி விருத்தியுரையுடன்		12	0
சிவரகசிய மூலம்		8	0
கந்த புராணம் பொழிப்புரை படங்களுடன் (2-பாகம்)		25	0

குறிப்பு:—மேற்கண்ட புத்தகங்களைப் பெற விரும்புகிறவர்கள் புத்தக விலையில் நான்கில் ஒருபங்கு முன்பண மனுப்பினல் மட்டும் புத்தகம் மீதித் தொகைக்கு வி. பி. யில் அனுப்பப்படும்.

'செந்தமிழ்ச் செல்வி' ஆபீஸ்,
306, லிங்கச் செட்டித் தெரு, சென்னை.

திருநெல்வேலி டவுண் மேலரதவீதி
மீரானியா பிரிண்டிங் பிரஸில்,

பலவர்ண மைகளில் சுத்தமான எழுத்துக்களால், குறித்த காலத்தில், குறைந்த கூலியில், அழகிய முறையில், அச்சிட்டும், பையிண்டிங், ரூலிங், முதலியனவும், விசேட பயிர்ச்சியுள்ளவர்களால் செய்யப்பட்டு, நல்ல மேற்பார்வையில் நிர்வகிக்கப்படுகிறது.

முக்கிய நோக்கம்:—ஆர்டர் கொடுப்பவர்களை திருப்தி அடையச் செய்தலே.

"லோகோபகாரி"

வியாழன் தோறும் வெளிவரும் வாரப் பத்திரிகை. இருபத்தொன்பது வருஷகாலமாக இது தமிழுலக மெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் ராஜாங்க விஷயங்களும் மற்றப் பொது விஷயங்களும் எளிய இனிய தமிழில் எழுதப்படும். உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாசாரங்களும் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். வாரந்தோறும் இனிய பாடல்கள் இதில் வெளிவரும். சித்திரப் படங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து, நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு, சகலவிஷயங்களிலும் இந்தியர் சுயராஜ்ய பதவியடைந்து, ஞாலமெல்லாம் இன்பம் வேண்டுமென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம். பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை இப்பொழுது இதன் ஆசிரியாராயிருக்கிறார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும்.

வருட சந்தா ரூபாய் நான்கே. வெளிநாட்டிற்கு ரூபாய் ஆறு. மாதிரிப் பிரதி இனாம்.

காரியஸ்தர், லோகோபகாரி, கோமளேசுவரன் பேட்டை, சென்னை

கையொப்பு விபரம்

	உள்நாடு.	வெளிநாடு
ஆண்டு 1-க்கு ரூ.	3 0 0	3 8 0

விளம்பரக் கூலி

ஒரு பக்கத்திற்கு மாதம் 1-க்கு	ரூ.	8 0
அரைப் பக்கத்திற்கு	,,	5 0
கால் பக்கத்திற்கு	,,	3 8

நீடித்த காலம் விளம்பரஞ் செய்பவர்க்குச் சிறிது கழிவு தருதல் கூடும். எல்லா விபரங்கட்கும் அடியிற்காணும் விலாசத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

கள்ளர் சரித்திரம்

இது திருவாளர். ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களால் புதிதாக வெழுதப்பட்டு வெளிவந்துவிட்டது. அவர்கள் முன்னர் எழுதி வெளியிட்ட கபிலர், நக்கீரர். வேளிர் வரலாற்றின் ஆராய்ச்சி ஆகிய மூன்று புத்தகங்களையும் வாசித்துணர்ந்த செந்தமிழ்ச்செல்வர்கட்கு இந்நூலின்கண் பொதிந்துகிடக்கும் ஆராய்ச்சி நலங்களை எடுத்துரைத்தல் அனுவசியமாகும்.

இதன் விலை. ரூ. 1.

வெளிவந்து விட்டன! வெளிவந்து விட்டன!!

திருமந்திர மூலம்

இது திருவாளர் திரு. வி. கலியாண சுந்தரம் பிள்ளையவர்களால் பார்வையிடப்பட்டு வெளிவந்துவிட்டது. திருத்தமான பதிப்பு. உயர்ந்த சீர்மைக் கடிதத்தில் பதிப்பித்தது. அழகிய கலிக்காக் கட்டடமுடையது. கையடக்கமான சிறிய அளவுடையது. திருமூல நாயனர் திருவுருவப்படம் ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. புதிபபதிப்பு விலை ரூ. 2 4

சருவஞானோத்தர ஆகமம் ஞானபாதம்

தமிழ் மூலமும் மூத்திரத்த விருத்தியும்

மூலம்: ஸ்ரீ கண்ட பரமேசுவரரால் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு உபதேசித்தருளப்பட்டது.

உரையாசிரியர்:—திருவாளர் பொ. முத்தைய பிள்ளை.

ராப்பர் விலை ரூ. 1 8. கலிக்கா விலை ரூ. 2 0.

'செந்தமிழ்ச் செல்வி' நிலையம், G. T., சென்னை.

Printed at the 'Sivakami Vilasam Press' Published by V. Subbiah for the S. I. S. S. W. P. Society Ltd, 306, Linga Chetty St. Madras.